பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 மார்கழி 07 புதன்கிழமை (22.12.2004) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் 26

# பேச்சை உடன் ஆரம்பிக்குமாறு

# நோர்வேப் பிரதமர் வலியுறுத்து!

## இரு தரப்புக்கும் அவர் அழைப்பு

ஒஸ்லோ, டிசெம்பர் 22

**நீண்டகாலமாகத் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் உடனடியாக ஆரம்பிக்கவேண்டும். பேச்சு மேசைக்கு இரு தரப்பினரும் உடனடியாக வரவேண்டும்.**

**- இவ்வாறு அவசர அழைப்பு விடுத்துள்ளார், இலங்கையின் சமாதானப் பேச்சுக்களில் பிரதான அனுசரணைப் பணியை ஆற்றிவரும் நோர்வே நாட்டின் பிரதமர் ஷெல் மக்னே பொண்டவிக்.**

நோர்வேயில் நேற்று நடைபெற்ற மாநாடு ஒன்றில் பத்திரிகையாளர் ஒருவரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

சமாதானப் பேச்சுக்களில் தீவிரப் பங்களிப்பை ஆற்றிவரும் நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் சந்தித்துப் பேச்சுநடத்தி ஒரு நாளின் பின்னர் நோர்வேப் பிரதமரின் இந்தக் கருத்து வந்துள்ளது.

பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படுவதுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கை உரிய முறையில் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுவது அவசியம் என்றும் பொண்டவிக் வலியுறுத்தினார்.

"இலங்கையில் மீண்டும் ஒரு யுத்தம் ஆரம்பிக்கப்பட்டால் மக்கள் பாரிய அழிவுகளைச் சந்திக்கவேண்டி நேரிடும். நீண்டகால யுத்தத்தின் மூலம் இலங்கை மக்கள் ஏற்கனவே பெரும் இழப்புக்களைச் சந்தித்துள்ளார்கள். சொல்லொ

(16ஆம் பக்கம் பார்க்க)

## போராளி வீரச்சாவு

கிளிநொச்சி, டிசெ.22

கடந்த 17.08.1999 அன்று தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா இராணுவத்தினருடனான மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார் என 'புலிகளின் குரல்' வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

கப்டன் சர்வன் (கோவிந்தசாமி சண்முகதாஸன் - பாரதிபுரம் கிழக்கு, இரணைமடுச் சந்தி) என்ற போராளியே வீரச்சாவடைந்தவ ராவார்.

(4-12)

# எஸ்.பியின் விடுதலையை வற்புறுத்தி நேற்று ஆயிரக் கணக்கானோர் கொழும்பில் திரண்டனர்

கொழும்பு, டிசெ.22

நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டில் தண்டிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள எஸ்.பி.திஸநாயக்கவை விடுவிக்கக்கோரி பல்லாயிரக் கணக்கான மக்கள் நேற்று தலைநகர் கொழும்பில் திரண் டனர்.

எஸ்.பியின் விடுதலையை வலியுறுத்தி அவரது சொந்த இடத்திலிருந்து புறப்பட்ட பாதயாத்திரையுடன் கொழும்பில் இருந்து புறப்பட்ட நான்கு பேரணிகளும் ஹைட்பார்க்கில் இணைந்துகொண்டன.

நாட்டில் பல பாகங்களிலும் இருந்து பல ஆயிரக் கணக்கான பொதுமக்கள் இன, மத, கட்சி பேதங்கள் இன்றிக் கலந்துகொண்டனர்; எஸ்.பிக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பட்டதாரிகள் நியமனம் ஜனவரியில் நிச்சயம்!

கொழும்பு, டிசெ.22

வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளுக்குத் தொழில் வழங்கும் திட்டத்தின்கீழ் நியமனம் பெற்றுள்ள அனைத்துப் பட்டதாரிகளும் ஜனவரி முதலாம் திகதி முதல் நிரந்தர நியமனத்தைப் பெறவுள்ளனர் என ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்று அறிவித்திருக்கிறார்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச துறையில் நியமனங்களை வழங்கும் திட்டத்தின்கீழ் தற்போது உள்ளகப் பயிற்சிகளைப் பெற்றுவரும் பட்டதாரிகளை ஜனாதிபதி நேற்றுச் சந்தித்தார்.

கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்

(16ஆம் பக்கம் பார்க்க)






நேற்றைய பேரணியில் ஐ.தே.க. பிரமுகர்கள் கலந்துகொழுப்பதை முதலாவது படத்திலும் நாய்த்தீர்ப்பு (பளுதீந்துவ) என்று சிங்களத்தில் எழுதப்பட்ட துணியைச் சுற்றியபடி அங்கு விடப்பட்டிருந்த நாயொன்றினை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## புலிகள் - படையினர் நேற்று யாழ்ப்பாணத்தில் சந்திப்பு

யாழ்ப்பாணம், டிசெ.22

விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளும் இராணுவ அதிகாரிகளும் நேற்று யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையில் இருதரப்பினரும் சுமார் ஒரு மணிநேரம் உரையாடினர்.

இரு தரப்பினரிடையேயும் மாதாந்தம் இடம்பெறுகின்ற உயர்மட்டச் சந்திப்பு என்றாலும் தற்போதைய சூழ்நிலையில் இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் பெற்றிருந்தது.

நல்லூர், கோவில் வீதியில் அமைந்துள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

விடுதலைப் புலிகள் தரப்பில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, துணைப் பொறுப்பாளர் செம்மணன், ஊடகப் பொறுப்பாளர் இமையவன் மற்றும் யாழவன் ஆகியோரும் - படைத்தரப்பில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் கடற்படையைச் சேர்ந்த ஜகத், வடபகுதி உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் வானகுரு ஆகியோரும் இச் சந்திப்பில் இடம்பெற்றிருந்தனர்.

யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலை

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் சர்வாதிகாரத்தை அடக்கும்வரை போராட்டம் ஓயாது!

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில் காட்டம்!!

கொழும்பு, டிசெ.22

"ஜனாதிபதி சந்திரிகாவின் சர்வாதிகார அராஜகப் போக்கையும், அவரால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஜனநாயகப் படுகொலைகளையும் தடுத்து நிறுத்தும்வரை எமது போராட்டம் ஓயாது; ஒழியாது.

"இன்று நாம் ஆரம்பித்திருப்பது தனிப்பட்ட எஸ்.பி.திஸநாயக்கவின் விடுதலைக்கான போராட்டமல்ல. ஜனநாயகத்தின் கரங்களுக்குப் போடப்பட்ட விலங்கை உடைத்து எறிவதற்கான போராட்டம்.

"ஜனாதிபதி சட்டத்தையும் தனது சர்வாதிகாரத்தையும் பயன்படுத்தினால் நாங்கள் அதை எல்லாம்விட பலம்வாய்ந்த மக்கள் சக்தியைத் திரட்டி ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்புவது உறுதி."

- இப்படி சூளுரைத்தார் ஐ.தே.க. தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.

(16ஆம் பக்கம் பார்க்க)

## தலை துண்டிக்கப்பட்ட நிலையில் மன்னாரில் இளைஞனின் சடலம்!

வவுனியா, டிசெ.22

மன்னார் - முருங்கன் பள்ளகாமம் பகுதியில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று பொலீஸாரால் மீட்கப்பட்டு மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பள்ளகாமம் பகுதியில் வயல்வெளியை அண்டிய பற்றைக்குள்ளிருந்து நேற்றுக்காலை இச்சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. சுமார் 30-35 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞனின் தலை வெட்டப்பட்டு வெறும் முண்டமே காணப்பட்டது

(16ஆம் பக்கம் பார்க்க)




பறவையைப் போன்ற சுதந்திரம்

டிசம்பர் மாதத்தில் ரூபா 10,000/- அல்லது அதற்குக் கூடிய தொகையை உங்கள் ஸ்திரி கணக்கில் வைப்பு செய்தால் வருட முடிவில் நடக்கும் அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் கீழ்க்காணும் பரிசுகளைப் பெற உரிமை பெறுவீர்கள்.

1. முதலாம் பரிசு - ரூபா 100,000/-
2. இரண்டாம் பரிசு - ரூபா 50,000/-
3. மூன்றாம் பரிசு - ரூபா 25,000/-

NSB

# கொடுப்பனவு கோரி கிராம அலுவலர்கள் மனித உரிமைக் குழுவிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ். குடாநாட்டில் புனர்வாழ்வுக் கடமைகளில் ஈடுபட்டுவருகின்ற கிராம சேவையாளர்களுக்கு வழங்கவேண்டிய விசேட கொடுப்பனவைப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட கிராம சேவையாளர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளனர்.

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 95ஆம் ஆண்டு ஜூன் மாதம் புனர்வாழ்வு அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபடுகின்ற கிராம சேவையாளர்களுக்கு விசேட கொடுப்பனவாக மாதாந்தம் 400 ரூபாவீதம் வழங்கப்படவேண்டும்.

அதன் பிரகாரம் யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்களைச் ,சேர்ந்தவர்களுக்கு சுற்றறிக்கை வெளியிடப்பட்ட தினத்திலிருந்து இக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. யாழ் மாவட்ட கிராம அலுவலர்களுக்கு இக்கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட அரச அதிபரிடமும், சம்பந்தப்பட்ட அமைச்சு அதிகாரிகளிடமும் பலதடவைகள் முறைப்பாடு செய்யப்பட்டபோதும், இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

எனவே, ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படுவது போன்று எமக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-10-5)

# செயலகத்தில் முக்கிய கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ். மாவட்டத்தில் காணப்படும் பிரச்சினைகளை ஆராய்வதற்கான முக்கிய கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர், செயலக திட்டப் பணிப்பாளர், மேலதிக அரச அதிபர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஜ-204-5)

# வெள்ள நிவாரணப் பொருள்களை சேகரித்து வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.22

கிழக்கில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கென குடாநாட்டில் உள்ள சகல சனசமூக நிலையங்களும் தமது பகுதிகளில் உதவிப் பொருள்களைச் சேகரித்து வழங்கி உதவவேண்டும் என அதற்கென அமைக்கப்பட்டுள்ள குழுவினர் கேட்டிருக்கின்றனர்.

கிழக்கில் வெள்ள அனர்த்தத்தில் சிக்கி அவதியுறும் உறவுகளுக்கு வழங்குவதற்கென பழுதடையாத உணவுப் பொருள்கள், பால்மா வகைகள், மருந்து வகைகள், சிறுவர்களுக்கான புதிய உடைகள் என்பவற்றைச் சேகரித்து வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஆலயங்கள், தேவாலயங்கள், விளையாட்டுக் கழகங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், உள்ளூராட்சிப் பணிமனைகள் என்பனவும் இந்த உதவிப் பொருள்களைச் சேகரித்து வழங்கவேண்டும் என்று ஒழுங்கமைப்புக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (4)

# சரவணை உவர்நீர்த் தடுப்பணை சேதம்

யாழ்ப்பாணம்,டிசெ.22


சரவணை உவர்நீர்த் தடுப்பணை சேதமடைந்துள்ளதால் அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

சரவணை விவசாயிகளின் நன்மைகருதி உலக வங்கியின் கடன் உதவியுடன், வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் (நியாப்) கீழ் சுமார் 45 லட்சம் ரூபா செலவில் இந்த உவர்நீர்த் தடுப்பணை அமைக்கப்பட்டது.

மேற்படி உவர்நீர்த்தடுப்புணை அமைக்கப்பட்டு 6 மாதங்கள்கூட ஆகாத நிலையில் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக அத்தடுப்பணையின் கீழ்ப்பகுதியில் பாரிய குழி ஏற்பட்டுள்ளதுடன் -

தடுப்பணையின் கீழ்ப்பகுதி மழைநீரினால் அடித்துச்செல்லப்பட்டுவிட்டது. இதனால் மழை நீரும், கடல் நீரும் கலக்கும் அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைத் தடுப்பதற்காக உரைப்பைகளில் களிமண்ணை நிரப்பி தற்காலிக தடுப்பணைகளை அப்பகுதி மக்கள் அமைத்துள்ளனர். (எ-5)



சரவணைப் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்ட உவர்நீர் தடுப்பு அணை சேதமடைந்திருப்பதையும்- நன்னீர், கடல் நீருடன் சேராதவாறு தடுப்பு அணை முன்பாகக் களிமண்ணைக்கொண்டு தற்காலிகமாக அமைக்கப்பட்ட தடுப்பணைகளையும் படங்களில் காணலாம். *(படங்கள்: தீபன்)*

# காவலரண்களைப் பலப்படுத்தும் பொன்னாலை கடற்படையினர்

வலி.மேற்கு,டிசெ.22

மூளாய், பொன்னாலை ஆகிய பிரதேசங்களிலுள்ள கடற்படையினர் தமது காவலரண்களைப் பலப்படுத்திவருகின்றனர்.

கடற்படையினரின் இந்த நடவடிக்கை மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மூளாய், பொன்னாலையிலுள்ள கடற்படையினர் வீதியால் போக்குவரத்துச்செய்கின்ற வாகனங்களையும் பொதுமக்களையும் கடும் சோதனைக்கு உட்படுத்துகின்றனர்.

இரவு நேரத்தில் செல்கின்றவர்களை விசாரணைக்குட்படுத்திய பின்னரே காரைநகருக்குள் செல்வதற்கு அனுமதிக்கின்றனர். (ஜ-10-175)

# இன்பச்சோலை கிராமத்துக்கு வீதி அமைக்க நடவடிக்கை

வலி.மேற்கு,டிசெ.22

வட்டு.தெற்கு இன்பச்சோலை கிராமத்துக்கு வீதி அமைக்கப்படவுள்ளது. இதற்கான நிதியை யாழ். மாவட்ட அரச அதிபர் வழங்கியுள்ளார். சுமார் ஒரு லட்சம் ரூபாவில் இந்த வீதி அமைக்கப்படவுள்ளது.

அண்மையில் பெய்த பெருமளவு மழையினால் போக்குவரத்துச் செய்யமுடியாமல் வட்டு. தெற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள இன்பச்சோலை மக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகியிருந்தனர்.

வட்டு.முதலிகோயிலடியிருந்து இன்பச்சோலைக்கு வெள்ளவாய்க்கால் ஊடாகவே இக் கிராம மக்கள் போக்குவரத்து செய்துவந்தனர்.

அண்மையில் பெய்த பெருமழையினால் வெள்ள வாய்க்கால் வெள்ளத்தினால் நிரம்பி வழிந்தது. இதனால் இக்கிராம மக்கள் தமது அன்றாடத் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் அவதிப்படுகின்றனர்.

இன்பச்சோலைக் கிராம மக்களின் இந்த அவல நிலைமையை அரச அதிபரின் கவனத்துக்கு வலி.மேற்கு பிரதே செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் கொண்டுவந்திருந்தார். இதனையடுத்து புதிய வீதியை அமைப்பதற்கு உடனடியாக நிதி வழங்கப்பட்டுள்ளது. புதிய வீதி அமைக்கும் பணி உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிரதேச செயலக திட்டமிடல் பகுதியினர் தெரிவித்தனர். (4-175)

# கிழக்கில் மழை வெள்ளத்துடன் மிதந்துவரும் மிதிவெடிகள்!

கொழும்பு,டிசெ.22

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் சித்தாண்டி, முறக்கொட்டாஞ்சேனை மற்றும் புல்லுமலை போன்ற பகுதிகளில் பிளாஸ்ரிக்கினாலான மிதிவெடிகள் வெள்ளநீரில் மிதந்துவர ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான மிதிவெடிகளில் சிக்கி கால்நடைகள் உயிரிழந்தும், காயமடைந்தும் வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை இவ்வாறு நூறு முதல் நூற்றிஐம்பது வரையான மிதிவெடிகள் கண்டுபிடிக்கப்பட்டு மட்டக்களப்பிலுள்ள கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன. இதுகுறித்து மக்களை அவதானமாக இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.(க-4)

# இந்திய நாதஸ்வரக் கலைஞர்கள் காரைநகரில் இசைநாத மழை

காரைநகர்,டிசெ.22

தென்னிந்தியாவில் இருந்து வருகைதந்துள்ள தவில், நாதஸ்வரக் கலைஞர்களின் இசைநாதமழை நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை இரவு 7.00 மணிக்குக் காரைநகர் கிழவன்காடு முருகன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தத் தவில் நாதஸ்வரக் கச்சேரியில் தவில் கலைஞர்களான திருப்புங்கூர் ரி.ஜி. முத்துக்குமாரசாமி, மன்னார்க்குடி எம்.ஆர்.வாசுதேவன், இடும்பாவனம் எஸ்.கண்ணன், கிருவானைக் கோவில் எஸ்.சிறிகாந்த் ஆகியோரும் -

நாதஸ்வ்ரக் கலைஞர்களான மன்னார்க்குடி எம்.எஸ்.கே.சங்கரநாராயணன், மன்னார்க்குடி எம்.எஸ்.கே.வெங்கடேஸ், கோவிலூர் ஏ.குமார், கோவிலூர் ஈபாபு ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

இவர்களுடன் ஈழத்தின் பிரபல தவில் நாதஸ்வரக் கலைஞர்களும் இணைந்து தவில் நாதஸ்வரக் கச்சேரியை நடத்தவுள்ளனர். (ஜ-73)

# மர்மமான முறையில் உயிரிழந்த இளைஞனின் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.22

வேலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய இளைஞர் ஒருவர் சற்றுநேரத்தில் உயிரிழந்தார் என்று கூறப்படுகிறது. இவரது சடலம் யாழ். வைத்தியசாலையில் நேற்றுமாலை ஒப்படைக்கப்பட்டது.

சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த தம்பிராசா சந்திரகுமார் (வயது 37) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

வேலைத்தளத்திலிருந்து களைப்புடன் வீடு திரும்பி தண்ணீர் அருந்திய இவர், சிறிது நேரத்தின் பின்னர் சடலமாகக் காணப்பட்டார் என்று உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இறந்தவரின் தலைப்பகுதியிலும் கழுத்துப் பகுதியிலும் காயங்கள் காணப்பட்டன என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ். வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஜ-7-15)

# புற்றுநோய்ச் சிகிச்சைக்கு தனி வார்ட் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய்ச் சிகிச்சை விடுதி நேற்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

வைத்திய கலாநிதி ஆர்.கணேசமூர்த்தி மங்கள விளக்கேற்றினார். வைத்திய நிபுணர் திருமதி எஸ்.நாகேந்திரன் நாடா வெட்டி விடுதியைத் திறந்துவைத்தார்.

புற்றுநோயாளர்கள், வாரத்தில் வியாழன், சனிக்கிழமைகளில் காலை 9 மணிதொடக்கமும், செவ்வாய்க்கிழமைகளில் பிற்பகல் 2 மணிக்குப் பின்பும் இந்த விடுதியில் வைத்திய சேவைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

ஆண்கள் மற்றும் பெண்கள் இரு பாலாருக்கும் தலா 10 படுக்கை வசதிகளுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ் விடுதியில், நேற்றையதினமே நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சைகள வழங்கப்படுகின்றன.

இதேவேளை - தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நோயாளர்களுக்குச் சிகிச்சைகள் வழங்கப்படும்.

தெல்லிப்பழை வைத்தியசாலையில் எதிர்வரும் மார்ச் மாதமளவில் கதிர்வீச்சுச் சிகிச்சை இயந்திரம் பொருத்தப்பட்டதும் குடாநாட்டிலுள்ள நோயாளர்களுக்கு முழுமையான சிகிச்சை வழங்கப்படும். - இவ்வாறு சிகிச்சைகள் வழங்கப்படும போது மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றைய விடுதித் திறப்புவிழா நிகழ்வில், வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள், வைத்தியசாலைச் செயலாளர், தாதிகள், மேற்பார்வையாளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஜ-204-201-15)

# அமெரிக்காவிற்கு எதிராகப் போராட ஈ-ராக் மக்களுக்கு சதாம் அழைப்பு!



அமெரிக்காவிற்கு எதிராகப் போராட வருமாறு ஈராக் மக்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார் அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன்.

ஷியா, சுனிபிரிவு முஸ்லிம்களிடையே அண்மைய காலமாகப் பிரிவினைகள் அதிகரித்து வருகின்றன. வேறுபாட்டுச் சிந்தனைகள் முளைப்பதோடு, இருபிரிவினதும் செயற்பாடுகளும் அவ்வாறே அமைந்திருக்கின்றன. இந்த ஒற்றுமை இன்மை நிலவுகின்ற வேளையிலேயே சதாம் ஹுசைன் இந்த வேண்டுகோளை தமது வழக்கறிஞர்கள் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார் - தெரிவித்திருக்கிறார்.

சதாம் ஹுசைனின் வழக்கறிஞர்கள் ஜோர்தானில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலே சதாமின் இக்கருத்துக்களைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

ஈராக் மக்களிடம் பிரிவை ஏற்படுத்த அமெரிக்கா முயற்சி செய்துவருகிறது. அதற்குப் பலியாகாமல் ஈராக்கியர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அந்த ஒற்றுமைப் பலத்துடன் நமது நாட்டை ஆக்கிரமித்திருக்கும் அமெரிக்காவிற்கு எதிராகப் போராடவேண்டும். ஒற்றுமையாக இருப்பதே நம்மீதான நெருக்குவாரங்களை எதிர்கொள்ள வலுவான சக்தியாக இருக்கும் - அமையும் - என்று சதாம் கூறினார் என வழக்கறிஞர்கள் தெரிவித்தனர்.

சுனி முஸ்லிம் பிரிவினருக்கும், ஷியாம் முஸ்லிம் பிரிவினருக்கும் இடையில் முறுகல் நிலை அதிகரித்து வருகிறது என செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். ஈராக்கில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் குறித்து இரு பிரிவினரும் இருவிதமான கொள்கைகளையே கொண்டுள்ளனர்.

ஈராக் தேர்தலை ஒத்திவைக்கும் படியும், தவறும் பட்சத்தில் இத்தேர்தலைப் புறக்கணிக்கப்போவதாகவும் சுனி முஸ்லிம் அமைப்புக்கள் கூறிவருகின்றன. ஆனால், இத்தேர்தலைத் திட்டமிட்டபடி ஜனவரி 30 ஆம் திகதியே நடத்த வேண்டும் என்கிறது ஷியா பிரிவு அமைப்புக்கள்.

ஈராக்கில் பெரும்பான்மையாக ஷியா முஸ்லிம்களே இருப்பதால் நாட்டின் ஆட்சி ஆதிக்கம் அவர்களின் கைகளில் போய்விடும் என்பதே சுனி முஸ்லிம்கள் தேர்தலைப் புறக்கணிக்கக் காரணம் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சுனி முஸ்லிம்களே கிளர்ச்சித்தாக்குதல்களில் அதிகமாக ஈடுபடுகின்றனர் என்றும் -

அண்மையில் நஜாப், கர்பலாவில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலுக்கு சுனி முஸ்லிம் பிரிவினரே காரணம் என்றும் - அமெரிக்க வட்டாரங்கள் தெரிவித்தன என்று ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

இவ்வாறானதொரு நிலையிலேயே சதாம் ஹுசைன் ஈராக் மக்களை ஒற்றுமைப்படுமாறும் -

அமெரிக்காவிற்கு எதிராகப் போராடுமாறும் - அழைப்பு விடுத்திருக்கிறார். (க-8)

## தலிபான்களின் தாக்குதல்கள்: ஆப்கானில் 4 பொலீஸார் பலி!

கந்தகார்,டிசெ.22

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில் நான்கு பொலீஸார் கொல்லப்பட்டனர்.

கந்தகார் நகரின் அருகில் உள்ள மேவந்த் என்ற இடத்தின் சந்தைப் பகுதியருகே ரோந்துப் பணிகளில் ஈடுபட்டிருந்த பொலஸார் மீது தலிபான்கள் திடீரெனத் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலிலே நான்கு பொலீஸார் பலியாகினர். அமெரிக்கச் சிப்பாய்கள் இருவர் படுகாயமடைந்தனர். பாதுகாப்புப் படையினர் பதிலுக்குச் சுட்டதில் தலிபான் தீவிரவாதி ஒருவர் கொல்லப்பட்டார்; மூன்று பேர் தப்பிச் சென்றுவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த அமெரிக்கச் சிப்பாய்கள் சிகிச்சைக்காக ஜேர்மனிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். கந்தகார் மலைப்பகுதியில் தலிபான் தீவிரவாதிகள் மறைந்துள்ளனர் என்ற தகவலையடுத்தே அமெரிக்கக் கூட்டுப்படையினர் இப்பகுதியில் ரோந்துப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (க-8)

## பஸ் நதியில் வீழ்ந்து விபத்து: பெருவில் 49 பேர் மரணம்!

லிமா,டிசெ.22

பெரு நாட்டின் வடபகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 49 போ கொல்லப்பட்டுள்ளனர்.

காட்டுப்பிரதேசத்தின் மலைப்பகுதியில் சென்றுகொண்டிருந்த பயணிகள் பஸ்வண்டி, நிலை தடுமாறி பாலத்தைக் கடந்து ஓடும் நதியில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்துச் சம்பவத்தில் 4 சிறுவர்களும் உயிரிழந்தனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர். வடக்குப் பகுதியில் இருந்து தலைநகர் லிமாவை நோக்கிப் புறப்பட்ட பஸ்ஸே மேற்படி விபத்துக்குள்ளானது. 165 அடி ஆழத்தில் இந்த பஸ் வீழ்ந்துள்ளது என்றும் மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

மோசமான காலநிலை காரணமாகவே பாலத்தைவிட்டு இந்தபஸ் விலகி நதியில் வீழ்ந்திருக்கக்கூடும் என்று பஸ் நிறுவன உ[illegible]மையாளர்கள் தெரிவித்தனர். (க-8)

## ஈ-ராக் குண்டுத் தாக்குதல்கள்: 51 பேர் பொலீஸாரால் கைது!

பக்தாத்,டிசெ.22

ஈராக்கில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் நகரங்களான நஜாப மற்றும் கர்பலாவில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக இதுவரை 51 பேரைக் கைதுசெய்திருப்பதாக ஈராக்கியப் பொலீஸார் தெரிவித்தனர்.

இக்கொடூரத் தாக்குதல்களில் 61பேர் உயிரிழந்தனர்; 120 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். கர்பலாவில் அதிகமான வாகனங்களும், கட்டடங்களும் சேதமடைந்துள்ளன.

உலக அரங்கில்

கைதுசெய்யப்பட்டோர் தொடர்பான விவரங்கள் எதுவும் தெரியவில்லை. ஆனால், கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படும் ஒருவரிடம் அரசு நாட்டுக் கடவுச்சீட்டு இருந்ததாகக் கூறப்படுகின்றது.

இவ்விரு தாக்குதல்களும் ஈராக்கில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் ஆர்வம் காட்டிவரும் ஷியாப் பிரிவினரைக் குழப்பும் நோக்கத்துடனேயே நடத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதுவொரு தீவிரவாதச் செயல் என்று ஈராக் இடைக்கால அரசின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த வன்முறைச் சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்கள் பிரிவினைவாதக் கலவரத்தைத் தூண்டிவிடவே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இவர்கள் வகுப்புவாத சிந்தனையை ஈராக்கில் ஏற்படுத்தவே செயற்படுகின்றனர் என்று ஷியா முஸ்லிம்களின் மதத் தலைவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தங்களின் ஆதரவாளர்கள் அமைதிகாக்க வேண்டும் என்றும் -

சிறுபான்மை சுனிப்பிரிவு முஸ்லிம்களுக்கெதிராகப் பதில் தாக்குதல் எதுவும் நடத்தவேண்டாம் என்றும் - ஷியா பிரிவு மதத் தலைவர்கள் கோரியுள்ளனர்.

இத்தாக்குதல்களைப் பல உலகநாட்டுத் தலைவர்களும் கண்டித்துள்ளனர். ஈராக் தேர்தல் பணிகளில் ஈடுபடும் பணியாளர்கள் அச்ச உணர்வோடு உள்ளனர். இதனால், தேர்தல் பணிகள் மந்தமாகவே நடைபெறுகின்றன.

இத்தேர்தல் பணிகளில் ஐ.நா. ஊழியர்களோடு பயிற்றப்பட்ட ஈராக் பணியாளர்களும் இணைந்து செயற்படுகின்றனர். சுனி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பலூஜா மற்றும் ஏனைய நகரங்களில் தேர்தல் பணிகள் மிக மந்தகதியிலேயே இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தேர்தல் பணியாளர்களோடு அமெரிக்கக் கூட்டுப்படையினரும் இணைந்து செயற்படுகின்றனர். (க-8)



போர்த்துக்கல் நாட்டின் வடக்குப்பகுதியில் உள்ள போர்டோவில் கிறிஸ்மஸ் விழா களைகட்டி விட்டது. எந்தப் பக்கமும் திரும்பினாலும் கிறிஸ்மஸ் தாத்தா வேடமணிந்தவர்களாக காட்சி அளிக்கின்றனர். இப்படி வேடமணிந்த 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் நேற்றுமுன்தினம் பிரமாண்ட ஊர்வலம் நடத்தி சாதனை நிகழ்த்தினர்.

## சங்கரராமனைக் கொலை செய்ய அப்பு திட்டம் தீட்டினார் என்கிறது பொலீஸ்

காஞ்சிபுரம்,டிசெ.22

காஞ்சிபுரம் கோயில் நிர்வாகி சங்கரராமன் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் முக்கிய சந்தேகநபரான அப்பு எனும் கிருஷ்ணசாமி, கொலையாளிக்குப் பணம் கொடுத்து சங்கரராமனை கொலைசெய்யத் திட்டம் தீட்டினார் என்று விசாரணைகளில் தெரியவந்திருக்கிறது.

- இத்தகவலை சங்கரராமனின் கொலை வழக்கை விசாரணை செய்துவரும் பொலீஸ் அத்தியட்சகர் கே.பிரேம்குமார் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் கூறினார்.

இத்தூரில் சரணடைந்த அப்பு நேற்றுமுன்தினம் காஞ்சிபுரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அப்புவை மூன்று நாள்கள் பொலீஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிபதி அனுமதியளித்தார்.

அப்புவை நேற்றுமுன்தினம் இரவு காஞ்சிபுரம் நீதிமன்றத்திற்குச் சொந்தமான காட்டு பங்களாவில் விசாரணை மேற்கொண்டனர். பின்னர் செய்தியாளர்களுக்குப் பொலீஸ் அத்தியட்சகர் கே.பிரேம்குமார் கருத்து வெளியிடுகையில் -

கித்தூர் அருகே புத்தூர் மலையடிவாரத்தில் உள்ள அப்புவின் பண்ணை வீட்டில் வைத்து மாலை 4 மணிக்கு அவரைக் கைதுசெய்தோம். அப்புவிடம் தொடர்ந்தும் விசாரணைகள் நடந்து வருகின்றன. சங்கரராமன் கொலை செய்யப்பட்ட செப்ரெம்பர் மாதம் சென்று ஜெயேந்திரர் சுவாமிகளைச் சந்தித்தார் என்பதை ஒப்புக்கொண்டார் - என்று தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு மாவட்ட பொலீஸ் அத்தியட்சகர் கே.பிரேம்குமார் அளித்த பதில்கள் பின்வருமாறு:-

கேள்வி: அப்பு சரணடைந்தாரா? அல்லது கைது செய்யப்பட்டாரா?

பதில்: அப்பு கைது செய்யப்பட்டார். அவர் சரணடைந்தார் என்று சில பத்திரிகைகள் வெளியிட்டுள்ள செய்திகள் தவறானவை.

கேள்வி: அப்புவிடம் விசாரித்ததில் போதுமான ஆதாரங்கள் கிடைத்தனவா?

பதில்: ஆம். ஆதாரங்கள் கிடைத்துள்ளன. (க-8)

## இந்தியாவுடன் விரிவான உறவுகளை ஏற்படுத்த மலேஷியப் பிரதமர் விஜயம்

புதுடில்லி,டிசெ.22

இந்தியாவுக்கும், மலேஷியாவுக்கும் இடையிலான உறவுகள் பல்வேறு துறைகளிலும் விரிவடையும் என்று மலேஷியப் பிரதமர் அப்துல்லா அகமது பதாவி தெரிவித்தார்.

ஐந்து நாள்கள் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் பிரதமர் பதாவி இந்தியா சென்றடைந்தார். அங்கு ஜனாதிபதி மாளிகையில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பை ஏற்றுக்கொண்டு, உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இவ்வரவேற்பு நிகழ்வில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அகமது பதாவி தொடர்ந்தும் செய்தியாளர்கள் மத்தியில் உரையாடுகையில் தெரிவித்ததாவது:-

அனைத்துத் துறைகளிலும் இந்தியா உடனான உறவை வலுவானதாக விரிவடையச் செய்யவே - ஏற்படுத்திக் கொள்ளவே - மலேஷிய அரசு விரும்புகிறது. இந்நோக்கத்திற்கு எனது இந்தியப் பயணம் உதவும் என நம்புகிறேன் - என்றார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் பிரதமராகப் பதவியேற்றதன் பின்னர் முதன்முறையாக மலேஷியப் பிரதமர் பதாவி, சர்வதேச, தேசிய மற்றும் முக்கியமான இருதரப்புப் பிரச்சினைகள், ஒப்பந்தங்கள் குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குடன் பேச்சுக்களை நடத்தினார்.

மலேஷியப் பிரதமர், இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி, இந்திய எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே.அத்வானி ஆகியோரையும் சந்தித்துப் பேசத்திட்டமிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

தீவிரவாதிகளின் மிரட்டல், ஐக்கிய நாடுகள் சபையின் மறுசீரமைப்புத் திட்டங்கள், ஈராக் நிலைவரம் ஆகியவை பற்றியும் இந்தியத் தலைவர்களுடன் பிரதமர் பதாவி பேச்சுக்களை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (க-8)

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head Office
No.500, Galle Road,
Wellawatte,
Colombo - 06.
Tel:2505632 - 3 Fax:2500626
Jaffna Office
No.86, PointPedro Road,
Jaffna. Tel.:021-2226242
Fax:021-2225600
Trinco Office
No.47, Kandy Road,
Trincomalee.
Tel.:026-2221519
Fax:026-2221519
Branch
No. 295, Jampettah Street,
Colombo-13 Tel:2430782 Fax:2430782
கொழும்பு – யாழ். | யாழ். - கொழும்பு

நத்தார் நற்சிந்தனை
"மிகவும் குறுகிய காலமே இருக்கின்றது வரவிருக்கிறவர் வந்து விடுவார், காலம் தாழ்த்த மாட்டார் நேர்மையுடன் நடக்கும் என் அடியார், நம்பிக்கையால் வாழ்வு அடைவார்"
எபிரேயர் 10:37-38
உதயா சவுண்ஸ் அன் றெக்கோடிங் சென்ரர்
56, ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:- S.யேசுதாஸ்
(C/39899)

# UNIT

இந்திய பொறியியலாளர்களின் மேற்பார்வையில்

**UNI MULTIMED**
Intel 2.4 GHz processor,
AsRock Intel 845 Chipset Motherboard,
128 MB DDR-RAM, 40 GB HDD 7200 RPM,
52X CDROM, Enhanced Scroll Mouse,
49,900/=

**UNI DEV EXPERT**
Intel P4 2.4 GHz Hypher Thread processor,
ASROCK 800 FSB, 256 MB DDR-RAM,
80 GB 7200 RPM HDD,
16X Sony DVD ROM/52X Sony CD-RW
Enhanced scroll Optical Mouse.
64MB 8X AGPVGA Setup.
66,900/=

**UNI ULTRA - SATA EXPERT**
Intel P4 3.0 GHz Hypher thread Processor.
AsRock 800 FSB Intel 865 Chipset Motherboard,
512 MB DDR-RAM, 64MB 8X AGPVGA Setup
80 GB 1.5 GBPS SATA Hard Disk,
Higher End 800Dpi Optical Mouse,
16 X Sony DVD ROM, 52X Sony CD-RW,
89,900/=

Free..! Higher End Auto Shutdown UPS. Hi-quality 2.1 Higher-End Woofer, Screen Filter, Mouse Pad, Dust Cover & etc.

ALL SYSTEM WITH WORLD'S NO. 1 DELL MONITOR

**UNI ULTRA - SATA COMPLETE**
Intel P4 3.0 GHz Hypher thread Processor,
AsRock 800 FSB Intel 865 Chipset Motherboard,
512 MB DDR-RAM, 120 GB 1.5 GBPS SATA Hard Disk,
Higher End 800 Dpi Optical Mouse, 16X Sony DVD ROM,
52X Sony CD-RW, 128MB 8X AGPVGA with TV-Out,
Creative 7.1 Sorrounded Line Sound blaster, Higher-End
Latest Pixelview TV Tuner,
109,900/=

யாவும் கொழும்பை ஒத்த விலையில் OFFER

Free.! GEEPAS 5.1 3800W HI-FI Woofer

**All System With......!**
* All Mother Board are Hyper Thread Supported
* All System With 1024 Cache Memory
* Fashioned ATX Casing Along with Front USB and Sound
* 5.1 Channell Surround Sound System
* 8X AGPVGA, 8XUSB 2.0 ports
* Enhanced Multimedia Keyboard
* 100 Mbps Fast Ethernet NIC

OFFER X-MAS & NYEAR MEGA OFFER

சகல வன்பொருள்களுக்கும் 3 வருட உத்தரவாதத்துடன்

வூபர்கள் 1500 ரூபா முதல்
தரம் சிறந்ததால்தான்
3 வருட உத்தரவாதம்

347, K.K.S. Road, Manohara Theatre Junction,
Jaffna, Sri Lanka.

Universal Technology (Pvt.) Ltd.
Station Road, Chunnakam.

MOB:- 077 3134737, 077 3134725, 077 6093477.


# வடமராட்சியில்
## ENGLISH MEDIUM CLASSES

Grade: 6,7,8
ஆசிரியர்: P. ஈஸ்வரநாதன் B.Sc.(Agric.) Dip. in Ed.

பெற்றோர்களே!
* உங்களுக்கு உங்கள் பிள்ளைகளின் ஆங்கிலக்கல்வியில் அக்கறை உண்டா?
* உங்கள் பிள்ளைக்கு ஆங்கிலக்கல்வியில் நாட்டமுண்டா? 'ஆம்' எனின் - கவலையை விடுங்கள்.
* G.C.E.O/L வரை ஆங்கில மொழிவகுப்புக்கள் வைக்கப்படும் என்ற உத்தரவாதத்துடன் உங்கள் பிள்ளையைக் கையேற்கின்றோம்.
* தரம் 7, 8 இற்கு வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன. தரம் 6 இற்கு ஆரம்பம் 22.12.2004 (புதன்கிழமை)
* காலதாமதம் உங்கள் பிள்ளையின் கல்வியில்தான் பாதிப்பை ஏற்படுத்தும்.

தொடர்புகளுக்கு:-
021 2263321
060 2212408

ரவீன்ஸ் ரெலிகோம்
"சிங்கத்தின் வீடு"
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(39988)(43-13)

## PRE - QUALIFICATION REQUEST FOR CIVIL CONTRACTORS

The Swiss Development Co-operation office (SDC), Jaffna, for their programme year 2005/06, call for registering contractors, Interested civil contractors are requested to forward their application describing their ICTAD grading and other qualities for the perusal of the contracting agency. Contracting agency intends to make projects of worth varies from 0.5 million to 100 million. All the applications are to be submitted at SDC Field Office, 521/11, Point Pedro Road, Nallur, Jaffna on or before 12.01.2005. SDC will show deep interest in the technical qualities of the contractors. However SDC will reserve their right to qualify contractors by the way of appropriation.

Swiss Co - operation office,
Jaffna.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
08 - 04 - 1941



மறைவு
22 - 11 - 2004

### அமரர் முருகன் குமரேசன்

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து
அமரர் ஆகிவிட்டீர்களே!
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் இன்று (22.12.2004) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறுகின்றன. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அவிட்டியப்புலம்,
கொற்றாவத்தை.
(39937)(13-45-43)
- குடும்பத்தினர்.

## பொதுமக்களுக்கான பணிகள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் வருட இறுதி வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை பொது மக்களுக்கான பணிகள் இடம்பெற மாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திணைக்களத்தின் செயற்பாடுகள் அனைத்தும் அடுத்த மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் வழமை போல் நடைபெறும் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித்தார். (10-7)

## சுருக்கெழுத்துக் கழகத்தின் ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.22

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் 17 ஆவது சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் சி.குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் பிரதமவிருந்தினராகவும் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கௌரவவிருந்தினராகவும் கலந்துகொள்வர். சான்றிதழ் வழங்கலைத் தொடர்ந்து சுருக்கெழுத்து மேதை 'சேர் ஐசாக் பிற்மன்' பற்றிய வில்லிசை நிகழ்வும் திருப்புமுனை என்ற நாடகமும் இடம்பெறவுள்ளன. (10-204)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16 - 12 - 1950



மறைவு
13 - 01 - 2002

### அமரர் மார்க்கண்டு ஆனந்தராஜா

திதி: ஏகாதசி (22.12.2004)

அன்புடனும் பண்புடனும் ஆதரவு காட்டியே
அகிலமதில் மாண்புடனே புகழோடு வாழ்ந்தீரே
கண்ணை இமை காப்பது போல் எமைக்
காத்த அன்புத் தெய்வமே - இன்று
நீங்கள் எமை விட்டுப் பிரிந்து சென்று
ஈராண்டு ஆனாலும் ஆறாது எம் துயரம்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

தோப்பு தெற்கு,
அச்சுவேலி.
(39934)(43-13-45)
குடும்பத்தினர்.

# பதவி வெற்றிடங்கள்

## Rainbow Travels & Tours

கொழும்பைத் தலைமைப்பீடமாகக் கொண்டுள்ள இந்நிறுவனம் யாழ்.மண்ணில் தனது கிளை ஸ்தாபனம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது. இந்நிறுவனத்துக்குக் கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு ஆள்கள் தேவைப்படுகின்றனர்.

### பதவி வெற்றிடங்கள்

1. முகாமையாளர் (Manager)
2. கணக்காளர் (Accountant)
3. எழுதுநர் (Clerk)
4. கணனி இயக்குநர் (Computer Operator)
5. விமானச்சீட்டு விற்பனையாளர்
6. தொலைபேசி இயக்குநர் (Telephone Operator)
7. வெளிக்கள உத்தியோகத்தர்கள் (Field Officers)
8. அலுவலகப் பணியாளர் (Peon)

மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு ஏற்ற தகைமைகளைக் கொண்டுள்ளோர் உங்கள் கல்விச் சான்றிதழ்களுடன் (24.12.2004) வெள்ளிக்கிழமை காலை 9.00 - 12.00 மணிக்கும் இடையில் கீழுள்ள முகவரிக்கு நேரில் சமுகந்தரவும்.

முகவரி:
**Rainbow Travels & Tours,**
321/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(ராஜா கிறீம் கவுஸ் அருகில்).

(சி-39938)(43-13-45)


எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் கிறிஸ்மஸ் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.

★ கிறிஸ்மஸ் - புதுவருட நன்னாளில் உங்களது
மழலைச் செல்வங்களின்
விதவிதமான நவநாகரிக ஆடைத்தெரிவுகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

## யாழ். பேபிநீட்ஸ் அன் பார்மசி



அத்துடன்
* குழந்தைகளுக்குத் தேவையான வோக்கர், சிறிய கட்டில்கள், நப்பின், பம்பஸ், சிறிய சைக்கிள்கள், வயதிற்கேற்ற விளையாட்டுப் பொருள்கள் அனைத்தும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
* பிரசவ தாய்மார்களுக்குத் தேவையான சகல பொருள்களும் ஒரே இடத்தில்
* சகல ஆங்கில மருந்து வகைகளும் ஒரே இடத்தில்



அத்தனையும் தரமான பொருள்கள்
இன்றே நாடுங்கள்

யாழ். பேபி நீட்ஸ் அன் பார்மசி
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(பஸ் நிலைய வைரவர் கோயில் முன்பாக)

((39936)(12)

உதயன்

## ஏமாளிகள் அல்லர் விடுதலைப் புலிகள்

இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை அடுத்த ஓராண்டுக்குள் ஒழிப்பேன் என்று நாட்டு மக்களுக்கும் அப்போது ஜே.வி.பி. சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முன்வந்த நிகால் கலபதிக்கும் எழுத்து மூலம் உறுதி வழங்கி, அதன் வாயிலாக நாட்டு மக்களினதும் ஜே.வி.பியினதும் ஆதரவுடன் 1994 இல் ஜனாதிபதித் தேர்தலில் வென்று ஆட்சிப் பீடம் ஏறியவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அம்மையார்.

ஆனால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் படலம் இன்னும் முற்றுப்பெறவில்லை. அந்த ஆட்சிமுறையை ஒழித்து, நாடாளுமன்றுக்குப் பதில் சொல்லக்கூடிய பிரதமர் தலைமையிலான- 'வெஸ்மினிஸ்ரர்' பாணியிலான- ஆட்சி முறையைக் கொண்டுவருவேன், என்று சொல்லிச் சொல்லியே தன்னுடைய இரண்டு பதவிக்காலத்தைக் கொண்டு இழுத்து விட்டார் ஜனாதிபதி குமாரதுங்க.

இப்போது தமது எஞ்சிய பதவிக்காலத்தின் அந்தத்தில் அவர் நிற்கின்றார். எந்த அரசமைப்பு வரைமுறையில்லாத - கட்டுமட்டில்லாத- நிறைவேற்று அதிகாரங்களை ஒரு தசாப்த காலத்திற்கும் அதிகமாக அனுபவிப்பதற்கு அம்மையாருக்கு வாய்ப்பளித்ததோ, அந்த அரசமைப்பே இரண்டாவது பதவிக்காலத்துடன் செல்லாக்காசாகி அவரை வீட்டுக்கு அனுப்புவதற்கும் தயாராகிக் காத்து நிற்கின்றது.

இந்த அரசமைப்புத் தொடர்ந்தால் தாம் அதிகாரமற்ற சாதாரண பிரஜையாக வீட்டுக்குச் செல்லும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்பது ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு நன்கு தெரியும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கிறேன் என்று கூறி, அதைச் செய்வதன் மூலமாவது அரசியல்-ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள முடியாதா என்ற நப்பாசை இப்போது அவருக்கு.

அதற்கான முயற்சிகளில் அவர் தலைகீழாக இறங்கி இருக்கிறார். அதற்காகத் திட்டமிட்டு முழுமூச்சில் காரிய மாற்ற முனைப்பாகின்றார்.

நாட்டின் தேசிய பிரச்சினை, பொருளாதார நெருக்கடி, அரசியல் குழப்பங்கள் போன்றவற்றைத் தன்னுடைய தனிப்பட்ட அரசியல் லாபங்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்துவதில் வெகுசமர்த்தர்- சாணக்கியர்- குமாரதுங்க அம்மையார். இப்போதும் அதைத்தான் செய்ய- அதற்காகக் காய்களை நகர்த்த- அவர் எத்தனிக்கின்றார் என்பது வெள்ளிடை மலை.

அரசியல் அதிகாரத்தில் தன்னைத் தக்கவைப்பதற்கான அரசமைப்பு மாற்றங்களை அடுத்த மாதம்- தை பிறப்போடு - நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவர அவர் திட்டம் தீட்டித் தயாராகின்றார் என்பது பெருமளவில் உறுதியாகிவிட்டது.

இந்த அரசமைப்பு மாற்றங்களை வெற்றிகரமாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி- உரியமுறைப்படி- அவற்றைச் சட்டமாக்க வேண்டுமானால்- நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவு அவருக்கு அவசியம்.

அதை எப்படித் திரட்டுவது என்பதுதான் அம்மையாரைப் பொறுத்தவரை இப்போது நாளும்பொழுதுமான சிந்தனை.

அந்த எண்ணத்தில் அதிரடி அரசியல் நகர்வுகளை அவர் செய்கின்றார்.

இந்தப் பின்னணியில்தான், அமைதிப் பேச்சை மீள ஆரம்பிப்பதற்கான புதிய நிகழ்ச்சித் திட்டத்தை நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு அரசு அனுப்பிவைத்திருக்கும் நடவடிக்கையை நாம் நோக்கவேண்டும்.

ஒருபுறம் தனக்கு அரசியலில் வாழ்வளிக்க வகை செய்யும் அரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்றுக்குச் சமர்ப்பித்துக்கொண்டு -

மறுபுறம், சமாதானப் பேச்சை மீள ஆரம்பிக்கத் தாம் தயாராகின்றவர் போல வெளிப்பார்வைக்குக் காட்டிக்கொண்டு - காய் நகர்த்தப் பார்க்கிறார் ஜனாதிபதி.

மீளப்பேச்சை ஆரம்பிக்க முனைப்பாக ஜனாதிபதி முயல்கின்றார் என்று காட்டி, அதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐ.தே.கட்சி எம்.பிக்கள் மத்தியில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி, அவர்களின் ஆதரவைத் தமது அரசமைப்பு மாற்றத்- திட்டத்துக்குப் பெற்றுக்கொள்வது அவரின் ஓர் இலக்கு.

பேச்சை ஆரம்பிப்பது போலக் காட்டி, சர்வதேச சமூகத்தின் உதவிகளைப் பெறுவதன் மூலம் தன்னுடைய அரசு தற்போது எதிர்நோக்கும் மிகமோசமான பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீளுவது அவரது இரண்டாவது இலக்கு.

இப்படித் தாம் மறைவில் வைத்திருக்கும் சதித்திட்டங்களை ஒப்பேற்றுவதற்குப் புதிய நிகழ்ச்சி நிரல் என்ற கயிற்றை அவிழ்த்து விடுகிறார் அம்மையார்.

ஆனால், அவருக்கு எதிர்த்தரப்பில் இருக்கும் விடுதலைப்புலிகள் முன்னைய தமிழ்த் தலைவர்கள் போல அரசியல் ஏமாளிகள் அல்லர் என்பதை அவர் மறந்து விடக் கூடாது.

திட்டவட்டமான - தெளிவான - இதுதான் வரையறை என்ற - விடயங்களைக் கொண்டிராமல் பூசி, மெழுகிக் கொடுக்கப்படும் நிகழ்ச்சித் திட்டத்துக்குப் புலிகள் என்றும் இணங்கமாட்டார்கள்; ஏமாறமாட்டார்கள்.

தவிரவும், தமிழ் மக்கள் கொடுத்த ஆணையைக் கையில் வைத்திருக்கும் - தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளான - விடுதலைப் புலிகள், மக்களின் ஆணையை மீறும் பேச்சுத் திட்டத்துக்குச் சம்மதிக்கமாட்டார்கள் என்பதும் நிச்சயம்.

இலங்கை அரசின் புதிய நிகழ்ச்சித் திட்டம் இந்த இரண்டு வரையறைகளுக்குள்ளும் புலிகளால் எடைபோட்டப்படும்போது தப்பிப் பிழைக்குமா? ஏற்றுக்கொள்ளப்படுமா என்பதெல்லாம் சந்தேகமே.

## புத்தாண்டு விடுமுறைக் காலத்தை ஒட்டி மிதிவெடி அகற்றுவது இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,டிசெ.22

நத்தார் மற்றும் புதுவருட பண்டிகைக் காலத்தை முன்னிட்டு குடாநாட்டில் கண்ணிகள் மற்றும் மிதிவெடிகளை அகற்றும் சகல பணிகளும் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன.

கடந்த 15ஆம் திகதி முதல் இந்தப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன என்று யாழ். செயலகத்தில் இயங்கும் மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் தெரிவித்திருக்கிறது.

புத்தாண்டுப் பண்டிகை மற்றும் ஆண்டு இறுதி அறிக்கைகள் தயாரித்தல், வெளிநாட்டு நிறுவனங்களின் பணியாளர்கள் தாயகம் திரும்பியமை போன்ற காரணங்களினாலேயே மிதிவெடி அகற்றும் பணிகள் இடைநிறுத்தப்பட்டன என்றும் - மீண்டும் ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் இப்பணிகள் முன்னெடுக்கப்படும் எனவும் - அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஜ-7)

## பொது முகாமையாளரின் பதவி நிரந்தரமாகியது

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பதில் பொது முகாமையாளராகப் பணியாற்றி வந்த எம்.தெய்வேந்திரத்திற்கு திருகோணமலையில் உள்ள வடக்கு- கிழக்கு மாகாண பணியாளர் ஆணைக்குழுவால் பொது முகாமையாளருக்கான நிரந்தர பதவி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

எம்.தெய்வேந்திரம் முன்னர் சங்கத்தின் கணக்காளராகவும் பதில் பொது முகாமையாளராகவும் பணியாற்றி வந்தார். (ஜ-17)

## பாதுகாப்பு வலயத்தில் வசிக்கும் எழுத்தாளரின் அனுபவத் தொகுப்பு

### அடுத்த மாதம் நூலாக வருகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.22

கடந்த 20வருடங்களாக அதி உயர் பாதுகாப்பு வயைத்தில் வாழ்ந்துவரும் எழுத்தாளர் ஒருவரின் அனுபவம் அடங்கிய சிறுகதைத்தொகுப்பு யாழ். இலக்கிய வட்டத்தின் வெளியீடாக வெளிவரவுள்ளது.



கடந்த 20 வருடங்களாக இராணுவத்தின் அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள தையிட்டியில் வசித்துவரும் அ.இராசதுரை (வயது-66) என்பவரின் சிறுகதைத் தொகுப்பே வெளிவரவுள்ளது.

கடந்த் சுமார் இருபது வருடங்களாக நடைபெற்றுவந்த யுத்தத்தின்போது மாவிட்டபுரம், கீரிமலை, தையிட்டி, காங்கேசன்துறை பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்த போதிலும் இவர் கடந்த இருபது வருடங்களாக தனது மனைவியுடன் சொந்த இடமான தையிட்டியிலேயே வசித்துவருகின்றார். மாதமொருமுறை உலர் உணவு நிவார்ணம் பெறுவதற்காக மட்டுமே தெல்லிப்பழைக்கு வந்து போவதுண்டு -

இவர் தனது சொந்த இடத்தில் 20 வருடங்களில் பெற்ற அனுபவங்களையும் தனது சொந்தக் கிராமம் பற்றிய உணர்வுகளையும் கொட்டி எழுதிய சிறுகதைத் தொகுப்பே அடுத்த மாத முற்பகுதியில் வெளிவரவிருக்கின்றது.

இந்நூல் வெளியீட்டுக்கான நிதியுதவியினை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் உப அதிபர் செஞ்சொற்செல்வன் ஆறு.திருமுருகன் 'சிவயோக அறக்கொடை' நிதியத்திலிருந்து வழங்கவுள்ளார் அறியவந்துள்ளது. (ஜ-13)

## சாயி நிறுவனத்தின் உதவியில் மூன்றாவது வீடு அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.22

வடபிராந்திய ஸ்ரீசத்திய சாயி சேவா நிறுவனத்தின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மூன்றாவது வீடு இன்று புதன்கிழமை கையளிக்கப்படவுள்ளது.

ஆனைக்கோட்டை, சாவற்கட்டைச் சேர்ந்த ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட பொன்னுத்துரை என்பவரது குடும்பத்துக்கே இந்த வீடு வழங்கப்படவுள்ளது. பொன்னுத்துரை பாரிசவாத நோயினால் பாதிக்கப்பட்டவர்.

இன்று காலை 9.00 மணிக்கு சம்பிரதாயபூர்வமாக வீடு கையளிக்கப்படும்.

சாயி அன்பர்கள் வழங்கிய சிறு அன்பளிப்புகள் மூலம் சேகரிக்கப்பட்ட நிதியிலிருந்து இந்த வீடு நிறுவப்பட்டிருக்கிறது.

இரண்டு அறை, குசினி, விறாந்தை, மலசலகூடம் அடங்கலாக வீடு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

வீட்டின் தோற்றத்தையும் குடும்பத்தினரையும் படங்களில் காணலாம். (ஐ)

## வடமராட்சி கிழக்கில் இரு பாடசாலைகளுக்கு தற்காலிகக் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன

வடமராட்சி கிழக்கிலுள்ள வெற்றிலைக்கேணி, றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை, கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை ஆகியவற்றுக்குத் தற்காலிக கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான தீர்மானம் வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. உதவி அரச அதிபர் ஆர்.ரி. ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

செம்பியன்பற்று அரசினர் தமிழ்கலவன் பாடசாலை, மருதங்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளிலும் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கொட்டில்கள் சேதமடைந்துள்ளதால் அக்கொட்டில்களைப் புனரமைப்புச் செய்தல்.

ஆழியவளை சி.சி.தமிழ்கலவன் பாடசாலைக்கு சங்கீத பாடம் போதிக்க ஆசிரியரின்மையால் சங்கீத ஆசிரியர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்தல்.

மழைநீரைத் தேக்கிவைக்கும் தாங்கிகளை வடமராட்சி கிழக்கில் இயங்கிவரும் 11 பாடசாலைகளுக்கும் வழங்குதல்.

இப்பகுதியில் நிரந்தரக் கட்டட வசதிகளற்ற முன்பள்ளிகளுக்கு, நிரந்தர கட்டடங்களை அமைக்க நடவடிக்கை எடுத்தல். (10-173)

## யாழ்.கூ.சங்கக் கிளைகளில் 2 கிலோ கோதுமை மா

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதன் கிளைகள் ஊடாகப் பாவனையாளர்களுக்கு இரண்டு கிலோ கோதுமை மாவை விநியோகிக்கும் பணியை ஆரம்பித்துள்ளது.

கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதை அடுத்து சங்கம் மாவை பாவனையாளர்களுக்கு இரண்டு கிலோ வீதம் வழங்கவுள்ளதாக சங்கத் தலைவர் சூ. சிறில் தெரிவித்தார்.

இதேவேளை - சங்கத்தின் கூட்டுறவு நகர் விற்பனை வளாகத்திலும் இரண்டு கிலோ கோதுமை மா விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

நத்தார், புதுவருட பண்டிகையை முன்னிட்டு பண்டிகைக்காலப் பொருள்களையும் பாவனையாளர்களுக்கு நியாயவிலையில் விநியோகிப்பதற்கு சங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (ஜ -17)

### நாளை

மார்கழி 08
வியாழக்கிழமை
(23.12.2004)
திதி: துவாதசி
பிற்பகல் : 03.51
நட்சத்திரம் : கார்த்திகை
முழுவதும்
சுபநேரம்: 07.56 - 09.26
ராகுகாலம்: 01.56-03.26
(பழையநேரப்படி)

### யாழ்.மாநகரசபைப் பிரதேசத்தில்

## கட்டடங்களுக்கு அறவிடப்படும் தண்டப்பணம் திடீரென உயர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.22

கட்டப்பட்ட கட்டடங்களுக்கு வழமையாக அறவிடப்படுகின்ற தண்டப்பணத்துக்கு மேலதிகமாக, விகிதாசார தண்டப்பணம் அறவிடும் புதிய நடைமுறை ஒன்றை யாழ்.மாநகரசபை அறிமுகப்படுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது.

இதுதொடர்பாக கட்டடங்களின் உரிமையாளர்களுக்கு மாநகர சபையினால் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

கட்டடங்களுக்கு அறவிடுகின்ற இந்தப் புதிய விகிதாசாரத் தண்டப்பணம் தொடர்பாக மாநகரசபை, குடியிருப்பாளர்களுக்கு முறைப்படி அறிவிக்கவில்லை என்றும் -

திடீரெனப் பெருந்தொகைப் பணத்தைத் தண்டமாகச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பது பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் கட்டட உரிமையாளர் ஒருவர் கவலை தெரிவித்தார். (ஐ)

### உதாவாக்கு

பொறுமை என்னும் ஆற்றலை விடப் பெரிய ஆற்றல் இல்லை.

# புலிகள் - நோர்வே தரப்புகளுக்கிடையிலான தொலைபேசி உரையாடல் ஒட்டுக்கேட்பு

விடுதலைப் புலிகளுக்கும் நோர்வேத் தூதுவர் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஆகியோருக்குமிடையில் பரிமாறப்பட்ட தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ள தகவல் தற்போது அம்பலமாகியுள்ளது.

"இலங்கையில் சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் நோக்கி" என்ற தலைப்பில் கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாள்களில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலங்கையின் சமாதானத்திற்கான உலக கூட்டமைப்பினால் மாநாடொன்று ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது.

இந்த மாநாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போக்குடைய உள்நாட்டு, வெளிநாட்டு அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியின்போது விடுதலைப் புலிகளுக்கும் நோர்வேயின் முன்னாள் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க்கிற்கும். இடையில் இடம்பெற்ற தொலைபேசி உரையாடல் மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் ட்றொண்ட் பியுறுஹொவ்டேயுடன் இடம்பெற்ற உரையாடல் போன்றன ஒட்டுக் கேட்கப்பட்டு ஒலிப்பதிவு செய்யப்பட்ட நாடா ஒன்று போட்டுக் காண்பிக்கப்பட்டது.

இது எவ்வாறு கிடைத்தது என்பது குறித்து இராஜதந்திர வட்டாரங்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் வினா எழுப்பியதோடு ஆச்சரியமடைந்துள்ளார்கள்.

இது தொடர்பாக மாநாட்டு ஏற்பாட்டாளர்களில் ஒருவரான சுசிந்த குணதிலக்க கருத்துத் தெரிவிக்கையில், இந்த உரையாடல் விடயம் அம்பலமாகியது புதிய விடயம் அல்ல என்றும், இது 6 மாதங்களுக்கு முன்பு ஆங்கில பத்திரிகையொன்றில் வெளியாகியிருந்தது.

இங்கிலாந்திலுள்ள இந்திய அமைப்பொன்றின் ஊடாகவே இந்த ஒலிப்பதிவு நாடா வெளியாகியுள்ளது. அதுவே எமக்கு கிடைத்தது. அதனையே நாம் பயன்படுத்தினோம். இதிலிருந்து இந்தியாவின் தலையீடு இருப்பது தெரியவருகின்றது.

தொலைபேசி உரையாடலை அம்பலப்படுத்துவது ஜனநாயகத்திற்கு விரோதமான செயல் அல்ல என்றார். (8)

## போகம்பரைக்கு எஸ்.பியை மாற்றும் முயற்சிக்கு எதிர்ப்பு

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருக்கும் எஸ்.பி.திஸநாயக்கவைக் கண்டி போகம்பரை சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அவரின் மனைவி தமரா திஸநாயக்க எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முறையிட்டுள்ளார்.

போகம்பரைச் சிறைச்சாலைக்கு எஸ்பி. மாற்றப்பட்டால் அவருக்கான மருத்துவத் தேவைகளைச் .செய்வதில் சிரமங்கள் ஏற்படுமென்றும் திருமதி திஸநாயக்க, எதிர்க்கட்சித் தலைவரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.திருமதி திஸநாயக்கவின் இந்த முறைப்பாடு குறித்து ஆராயுமாறு எதிர்க்கட்சித் தலைவர் கட்சியின் முக்கியஸ்தர்களைப் பணித்திருக்கிறார். எஸ்பியை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைக் .குழு இதுபற்றி சிறைச்சாலை ஆணையாளருடன் பேச்சுக்களை நடத்தியிருக்கிறது என்று தெரிகின்றது. (க-4)

# நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு அரசமைப்பில் சீர்திருத்தம்

## அடுத்த மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுமா?

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை ஒழிப்பு மற்றும் தேர்தல் முறை மாற்றம் அடங்கிய அரசமைப்புச் சீரதிருத்தத்தை அடுத்த மாதம் மூன்றாவது வாரமளவில் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளில் ஜனாதிபதி தலைமையிலான அரசுத்தரப்பினர் மும்முரமாக ஈடுபட்டு வருவதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

1994 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும்போதுதான் ஜனாதிபதியாக வந்து மூன்று மாதங்களில் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை ஒழிப்பதாகப் பிரசாரம் செய்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க,

இன்னும் சில மாதங்களில் தனது பதவிக் காலம் நிறைவுறும் தறுவாயில் - தான்தான் ஐ.தே.க. சார்பிலான ஜனாதிபதி வேட்பாளர் என அண்மையில் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ள நிலையில் - சர்வ அதிகாரமும் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் சட்டரீதியான முயற்சிகளில் தீவிரமாக இறங்கியுள்ளார்.

அரசமைப்புச் சீர்திருத்த வேலைகள் தற்போது மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதனை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு முன் - அடுத்த மாதம் முதல் வாரமளவில் - அதன் சட்டவலு குறித்துப் பரிசீலிப்பதற்குச் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்போவதாகவும் ஆளும் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தால் மட்டுமே நிறைவேற்றப்படலாமாதலால், இந்தச் சட்டமூலத்திற்கு ஐ.தே.க. மற்றும் ஜாதிக ஹெல உறுமய எம்.பி.க்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு ஆளும்தரப்பு எம்.பிக்கள் குழு ஒன்று எதிர்க்கட்சி எம்பிக்களின் ஆதரவைத் திரட்டும் வேட்டையில் இறங்கியுள்ளது.

எம்.பிக்கள் எதிரணிக்கு ஆதரவு வழங்கினாலும் அவர்களின் எம்.பி. பதவிக்கு எதுவும் நேர்ந்துவிடாத வண்ணம் எம்பிக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் சிறப்புரிமைச் சரத்தும் உத்தேச அரசமைப்புச் சீர்திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பதால் எதிர்க்கட்சியிலிருந்து தமக்குத் தேவையான ஆதரவு நிச்சயம் கிடைக்கும் என்று ஆளும்தரப்பு வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

நடப்புத் தேர்தல் முறை மாற்றப்பட்டு ஜேர்மன் முறையிலான தேர்தல், உத்தேச அரசியல் சீர்திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவை .மேலும் தெரிவித்தன. (8)

# தாம் செய்த பணிகளைக் குருவுக்கே அர்ப்பணித்த சுவாமி சச்சிதானந்தா



அருள் ஒளியைப் பரப்பி பூமியில் உள்ளவர்களுக்குப் பணியாற்றத் தவப் பெரியார்கள் தோன்றுவது பாரத நாட்டின் தனிப்பெருமை. அந்நாட்டின் தென்பகுதியில் கோவையம்பதியைச் சேர்ந்த செட்டிப்பாளையத்தில் 22.12.1914 இல் சிறந்த நத்தார் வாரத்தில் அகஇருள் அகற்றி, ஆனந்த வாழ்வுக்கு வழிகாட்டுவதற்கு, இமயஜோதி சுவாமி சிவானந்தர் அவர்களால் இலங்கை மக்களுக்காகச் சேவை செய்யத் தெரிந்தெடுக்கப்பட்டு அவதாரம் எடுத்தவர்தான் யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தா அவர்கள்.

உடல் அழகும் உள்ளத்தில் உறுதியும் எடுத்த காரியத்தை முடிக்கும் திறமையும், நேர்மையும், பரநலமும், சாதி மத வேற்றுமை காணா பரந்த உள்ளமும் கொண்ட இவர், பாடசாலையில் உத்தியோகப்படிப்பை முடித்து வீட்டில் ஆன்மீக ஒளிகாணும் தெய்வீகக் கல்வியைக் கற்று பின் வாழ்க்கைக் காலத்தில் மின்சாரத் தொழிற்சாலை, மோட்டார் தொழிற்சாலைகளில் மேற்பார்வையாளராகக் கடமையாற்றினார்.

ஆத்மீக தாகம் கொண்ட இவருக்கு வள்ளலார், விவேகானந்தர், தாயுமானவர், இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி சிவானந்தர் போன்ற அருட்பெரியார்கள் புத்தகவாயிலாக, வழிகாட்டியாக அமைந்தனர். பின்னர், திருப்பராய்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனத்தில் மாணவர்கள் விடுதியை மேற்பார்வை செய்து. குழந்தைகளிடம் அன்னையைப் போல் அன்பு சொரிந்து வாழ்ந்தார். அக்காலத்தில் சுவாமி விபுலாநந்தா அவர்களிடம் பிரம்மச்சரிய தீட்சை பெற்று சாம்ப சிவசைதன்யர் என்னும் திருநாமம் பெற்றார்.


பின்னர், 1949 சித்திரையில் சுவாமி சிவானந்தரின் அருட்சக்தியால் ஈர்க்கப்பட்டுக் குருவின் ஆசி பெற்று, அதே ஆண்டு ஆடி மாதம் 10 ஆம் திகதி குருபூர்ணிமா தினத்தன்று சந்நியாசம் பெற்று சுவாமி சச்சிதானந்தர் ஆனார். 1951 இல் இந்திய யாத்திரை செய்து யோகப்பயிற்சியும் அருள் மொழிகளையும் வழங்கி ஞானதீபத்தை பிரகாசிக்கச் செய்தார்.

பின்னர், 1953 இல் சற்குரு சிவானந்தரின் ஆசியுடன் ஈழநாட்டில் பாடல்பெற்ற திருகோணமலையில் சேவையை ஆரம்பித்து திவ்ய ஜீவன சங்கத்தையும் இலங்கையில் ஸ்தாபித்தார். சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், சீனா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்குச் சென்று தெய்வீகப் பணியாற்றினார். எத்தனை பணிகள் செய்தாலும் அத்தனையையும் தன் சற்குருபாதத்திற்கே அர்ப்பணித்தார். இலங்கையின் பல பாகங்களிலும் திவ்ய ஜீவன சங்கக் கிளைகளை நிறுவினார். 1966 ஆம் ஆண்டு ஆடி மாதம் அமெரிக்க அன்பர்களின் வேண்டுகோளிற்கிணங்கி அமெரிக்கா சென்று பூரணயோக சமாஜக் கிளைகளை ஸ்தாபித்தார். அத்துடன், உலகெங்கணும் அதன் கிளைகளை நிறுவி நிம்மதியின்றித் தவித்த மக்களுக்கு அபயமளித்தார். இலங்கையின் யுத்த சூழ்நிலையில் இங்கு வரமுடியாதிருந்த வேளையிலும் இங்குள்ள தம் அன்புக்குரியவர்களிடம் இங்குள்ள மக்களை விசாரித்தும் அவர்களை ஆசீர்வதித்தும் கடிதமூலம் அறிவுரைகளைத் தந்துவந்தார்.

இறுதியாகத் தான்பிறந்த தமிழ் நாட்டில் கோயம்புத்தூரில் 19.08.2002 இல் சுவாமி அவர்கள சமாதியடைந்தார்கள்

-திருமதி க. சூரசங்காரன் -





யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 'கூட்டுறவு நகர்' (கோப் சிற்றி) என்ற விற்பனை வளாகத்தை கடந்த வாரம் திறந்து வைத்தது.

வளாகத் திறப்பு விழாவில் வண.பிதா தொம்மையப்பு யேசுதாசன் அடிகளார் மங்கள விளக்கேற்றுவதையும் -

சங்கத்தலைவர் சூ.சிறில் உரையாற்றுவதையும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், அருட்திரு ராஜ்குமார் அடிகளார், மௌலவி அலாவுதீன் ஆகியோர் அமர்ந்திருப்பதையம் மற்றும் சங்கத்தின் உபதலைவர் எஸ்.ரி.கணநாதன், இயக்குநர் சபா.தியாகராஜா, எஸ்.சிவமகாராஜா ஆகியோர் நிற்பதையும் படங்களில் கானலாம்.

*(படங்கள்:அரியாலைச் செய்தியாளர்)*

# எஸ்.பிக்கு எதிரான தீர்ப்புக் குறித்து சர்வதேச நீதிமன்றங்களில் முறையீடு!

## வரிந்து கட்டிக்கொண்டு தயாராகிறது ஐ.தே.கட்சி

கொழும்பு,டிசெ.22

முன்னாள் அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சி தேசிய அமைப்பாளருமான எஸ்.பி. திஸநாயக்கவுக்கு எதிராக வழங்கப்பட்ட குற்றத் தீர்ப்பை மீள்பரிசீலனை செய்யுமாறுகோரி உயர் நீதிமன்றத்தில் மீளாய்வு மனு ஒன்று தாக்கல் செய்யப்படும். அதேவேளை, இது தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்திடமும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும், ஜெனிவாவில் இயங்கும் சர்வதேச மன்னிப்புச் சபையிடமும் மனுக்கள் தாக்கல் செய்யப்படும். அதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்குச் சட்டத்திலும் இடம் உண்டு என்கிறார் ஐ.தே.க. பேச்சாளரும், முன்னாள் அரசமைப்பு விவகார அமைச்சரும், எம்.பியுமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.

நேற்றுமுன்தினம் , எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நீதிமன்றங்களின் தீர்ப்பை விமர்சிக்கக் கூடாது என்று எங்கும் சட்டம் இல்லை. மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதியிடம்கூட இந்தத் தீர்ப்பைப் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள் என்று கேட்டு பேட்டிகளைக்கூட எடுத்துப் பிரசுரிக்க முடியும். எதைப் பற்றியும் விமர்சிப்பது தனிமனித உரிமை. கருத்துச் சுதந்திரம் எல்லோருக்கும் உண்டு. நீதிமன்றங்களை அவமதிக்கும் வகையில் விமர்சனம் செய்தால் இதுதான் தண்டனை என்று எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

நீதிமன்றத் தீர்ப்புகளை விமர்சனம் செய்யக்கூடாது என்றும் கூறப்படவில்லை.

அதேவேளை, நீதிமன்றத்தின் முன் உள்ள விடயங்கள் தொடர்பாகவே விமர்சிக்கக்கூடாது. அப்படிச் செய்வதால் விசாரணைகளுக்கு அது பாதிப்பை ஏற்படுத்தும்.

எஸ்.பி.திஸநாயக்கவுக்கு வழங்கப்படும் தண்டனை ஜனநாயகத்தின் வாய்க்கே போடப்பட்ட ஒரு பூட்டாக அமைந்துவிட்டது.

எஸ்.பி.திஸநாயக்கவுக்குத் தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னரும், பின்னரும் இடம்பெற்ற சம்பவங்கள் பல சந்தேகங்களை எழுப்பி உள்ளன.

உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்குவதற்கு முன்னரே அமைச்சர் அநுராபண்டாரநாயக்க அதனைப் பகிரங்கமாக அறிவித்துவிட்டார்.

அதேபோன்று மேலும் பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிறைக்கம்பி எண்ணப்போகின்றனர் என்று ஜனாதிபதியும் கூறுகின்றார்.

இது ஜனநாயக உரிமைகளுக்கும், எதிர்க்கட்சியினருக்கும் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலாகவே அமைந்துள்ளது.

இது முற்றுமுழுதான அரசியல் பழிவாங்கல் போக்கு.

உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யமுடியாது. ஆனால், அதே உயர் நீதிமன்றத்தின் முன் மீள்பரிசீலனை செய்யும்படி கோரமுடியும்.

இதன் அடிப்படையிலேயே நாம் எங்களுடைய கோரிக்கையை முன்வைக்கவுள்ளோம்.

எஸ்.பி.விவகாரம் இன்று சர்வதேசப் பிரச்சினையாகிவிட்டது. ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் கொன்சவேட்டிவ் கட்சியினரும், சோசலிஸ்ட் கட்சியினரும் இணைந்து திஸநாயக்கவுக்கு நீதி வழங்கப்படவேண்டும். தனிமனித சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டும் எனக் குரல் எழுப்பி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. சர்வதேச மட்டத்திலேயே இப்படியான ஒரு தீர்ப்பு இப்போதுதான் முதன்முறையாக வழங்கப்பட்டுள்ளது. அதுவும் சிறிரங்காவில்தான்.

சர்வதேச சமூகத்தின் கேள்விகளுக்கு இலங்கை அரசு பதில் சொல்லியே தீரவேண்டும் - என்றார் பேராசிரியர் பீரிஸ்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.க.பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவும் கலந்து கொண்டார். (க-4-6)

**Improving Relevance and Quality of Undergraduate Education (IRQUE) Project**
**Intensive Course in English**

The students who have applied to follow the above course are kindly requested to be present at the Kailasapathy Auditorium, University of Jaffna on 03.01.2005 at 10.00 a.m.

IRQUE Project
University of Jaffna,
Jaffna.
20.12.2004

**Deputy Director / Administration.**

(C/39945) (24-13-45)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 01 - 03 - 1941



மறைவு 22 - 11 - 2004

## அமரர் இராசையா செல்வரத்தினம்
### (தெய்வேந்திரம்)

*அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து அமரராகிவிட்டீர்.*
*ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (22-12-2004) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறுகின்ற சபிண்டீகரணம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை ஆகியவற்றில் கலந்துகொள்வதோடு, மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபந் தெரிவித்தவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(39910)(26-13-45-24)

\- குடும்பத்தினர்.

# சம்மாந்துறையில் இளைஞர் கொலை

சாய்ந்தமருது,டிசெ.22

சம்மாந்துறையில் நேற்றுமுன்தினம் அதிகாலை இனந்தெரியாதவர்களால் முஸ்லிம் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சம்மாந்துறைப் பொலீஸ் பிரிவிற்குட்பட்ட மாளிகைக்காடு - காரைதீவு எல்லை வீதியின் குறுக்கே செல்லும் ஆணைக்குட்டி சாமி கோயில் வீதியில் அமைந்திருக்கும் பாலத்தடியில் இந்த இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவர் சாய்ந்தமருதைச் சேர்ந்த அலியார் முகம்மது நபார் (வயது 25) என இனம் காணப்பட்டுள்ளார்.

அதிகாலை 3.30 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. இவரின் தலையில் துப்பாக்கிச் சூடு வீழ்ந்துள்ளது. இறந்தவரை இழுத்துச்சென்று பாலத்திற்கு அருகிலுள்ள சகதியில் போட்டுவிட்டுக் கொலையாளிகள் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

கொலைக்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. பொலீஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (க-8)

# சாயி சமித்தியில் நத்தார் விழா

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ். பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நத்தார் விழா எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறும்.

பஜனை, கிறிஸ்தவ கீதங்கள் என்பனவற்றுடன் யாழ். பல்கலைக்கழகக் கிறிஸ்தவ நாகரிகத்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர் அருட்தந்தை ஜி.பிலேந்திரனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (ஐ)

# சவுக்கு வெட்ட மரத்தில் ஏறியவர் தவறிவீழ்ந்து படுகாயம்!

யாழ்ப்பாணம்,டிசெ.22

சவுக்கு வெட்ட மரத்தில் ஏறிய சிறுவன் தவறிவீழ்ந்து படுகாயமடைந்தார்.

மானிப்பாய்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை 7 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நவரட்ணராஜா புஸ்பராஜா (வயது-15) என்ற சிறுவனே படுகாயமடைந்தவராவார். இவர் கைமுறிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-12-190)


## மாபெரும் மலிவு விற்பனை



TV (14" - 29"), Sony, Panasonic Video deck மற்றும் FH Model மற்றும் Pioneer, Kenwood செற் அப் ரேடியோ மற்றும் Amplifier என்பன விற்பனைக்குண்டு.

(இம்மாதம் 20ஆம் திகதிமுதல் 31ஆம் திகதிவரை)



**சண் மல்ரி ரேட் சென்ரர்**
150, **K.K.S. Road, Jaffna.**



(39852)(26-13-45-24)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

சாரதியுடன் வான் ஒன்றை
வாடகைக்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து

### கேள்விப்பத்திரங்கள் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ தேவைகளுக்காகப் பயன்படுத்துவதற்குச் சாரதியுடன் கூடிய வான் ஒன்றை ஒருவருடத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கக்கூடிய நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்களிடமிருந்து அரக்கிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 10.01.2005ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை பல்கலைக்கழகக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்களை மீளளிப்புச் செய்யப்படாத வைப்புப் பணமாக 250/- ரூபாவைப் பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் செலுத்திய பற்றுச்சீட்டை உதவிப் பதிவாளர் நிர்வாகம் அவர்களிடம் சமர்ப்பித்து 03.01.2005 ஆம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 10.01.2005 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபாலில், "தலைவர், கேள்விச் சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி" என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். நேரடியாகச் சமர்ப்பிக்க விரும்புவோர் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியுள் இடலாம். கேள்விப் பத்திரங்கள் மற்றும் நிபந்தனைகளை அலுவலக வேலை நேரங்களில் உதவிப் பதிவாளர் நிர்வாகக் கிளையில் பரிசீலிக்கமுடியும்.

துணைவேந்தர்,
யாழ். பல்கலைக்கழகம்.
21.12.2004

(சி-39944) (24-13-45)


வாங்குங்கள்

# DSI

## மோட்டார் சைக்கிள் டயர்கள்

## வெல்லுங்கள்

**10** புதிய ரக
**SUZUKI EN 125**
மோட்டார் சைக்கிள்கள்,

மற்றும் **100**
ஓட்டுநர்
மேலங்கிகளை!



DSI மோட்டார் சைக்கிள் டயர்களை வாங்குங்கள். அதன்மூலம் 10 புதிய ரக சுசூகி EN 125 மோட்டார் சைக்கிள்களை வெல்லுவதற்கான சந்தர்ப்பத்தினைப் பெறுங்கள். அத்துடன் வேறும் பல தரம்மிக்க 100 ஓட்டுநர் மேலங்கிகளை ஆறுதல் பரிசில்களாக வென்றெடுங்கள்.

நீங்கள் ஒரு DSI மோட்டார் சைக்கிள் டயரினை வாங்கும்போது, அதனது உத்தரவாத அட்டையை நிரப்பி, கீழ்வரும் முகவரிக்கு தபாலில் இடுவதன் மூலம், இப்போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பைப் பெறுவீர்கள்.

நிபந்தனைகள் - ■ சாம்சன் றபர் இண்டஸ்றீஸ் (பிரைவேட்) லிம்டெற் ஊழியர்களுக்கும் அவர்களது நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களுக்கும் இது ஏற்புடையதல்ல ■ வெற்றி பெறுபவர்கள் தமது அடையாளத்திற்கான ஆதாரத்தை சமர்ப்பிக்கக் கூடியதாய் இருக்க வேண்டும்.

**DSI**
இலங்கையின் முன்னணி மோட்டார் சைக்கிள் ரயர், எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

DSI 20 ஆண்டுகளில்

**இச் சலுகை 2005 ஏப்ரல் 15 வரை மட்டுமே செல்லுபடியாகும்**
உங்கள் வியாபாரியிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

அகன்ற பல வகை, தரம்மிக்க மோட்டார் சைக்கிள் டயர்களிலிருந்து தெரிவு செய்யுங்கள்.

**ISO 9001-2000**
சான்றுப்படுத்தப்பட்டது.

**சாம்சன் றபர் இண்டஸ்றீஸ் (பிரைவேட்) லிமிற்றெட்**
ஜினசேன மாவத்தை, மகர, கடவத்தை
Tel: (011)2 926065, (011)4 816442
Fax: (011)2 925064, (011)4 816440
E-mail: dsityre@dsityre.lk **www.dsityre.com**



CREATIVE SERVICES

# நீங்காத நினைவஞ்சலி

**உஆம் ஆண்டு** | **முதலாம் ஆண்டு**



தோற்றம்
22-10-1932

மறைவு
21-10-2002

தோற்றம்
21-10-1936

மறைவு
02-01-2004

அமரர்
சண்முகம்பிள்ளை கனகசபாபதிப்பிள்ளை
(சண்முககுட்டி)
திதி: 29.10.2004

அமரர்
பொன்னம்மா கனகசபாபதிப்பிள்ளை
திதி: 22.12.2004

அன்புடன் அரவணைத்துப் பண்புகளை ஊட்டிப்
பாசத்தைப் பொழிந்து பக்குவமாய் வளர்த்து
வளமான வாழ்வுக்கு வழிசமைத்துத் தந்து
பாரினில் நாம் வாழ ஒளியேற்றி வைத்த
பெருமை மிகு அன்புத் தெய்வங்களே!
உங்கள் இனிய நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில் நீங்காது நிலைத்திருக்கும்.

கேணிக்கரை,
அளவெட்டி கிழக்கு.
(39857)(26-15-45)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## யாழ்.ஆஸ்பத்திரியில் பெண்ணிடமிருந்து 23 ஆயிரம் ரூபா அபேஸ்

23ஆயிரத்து 500 ரூபாவை இழந்த பெண கண்ணீருடன் வீடு திரும்பினார். யாழ். போதனா வைத்திய சாலையில் நேற்றுமுன் தினம் நண்பகல் இடம பெற்ற இச்சம்பவத்தில் விசுவமடுவைச் சேர்ந்த கெங்காதரன் புனிதமலர் என்ற குடும்பப் பெண்ணே கைப்பையில் இருந்த ரொககப் பணத்தையும், அடையாள அட்டையையும் பறிகொடுத்தவராவார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட கணவனைப் பார்ப்பதற்காக விசுவமடுவில் இருந்து இவர் பணத்துடன் புறப்பட்டார். பஸ்ஸில் வநதுசேர்ந்தார். யாழ். ஆஸ்பத்திரியில் நண்பகல் கணவனைப் பார்த்துவிட்டு புறப்பட்ட இவர் வெளியே வந்து பஸ் 'ரிக்கெற்' எடுப்பதற்குத் தனது பையைத் திறந்து பார்த்த போது அதற்குள்ளிருந்து பணமும் அடையாள அட்டையும் காணாமற் போயிருந்தமை தெரியவந்ததாக அவர் தெரிவித்தார்.

(4-15)

கலையாத நினைவுகளுடன் கலைந்த

# ஆறாம் மாத நினைவலைகள்



மலர்வு
24
-
10
-
1936

உதிர்வு
22
-
06
-
2004

**அமரர் விஸ்வலிங்கம் தம்பிஐயா**

மாதங்கள் ஆறு ஆனபோதும்
ஆறவில்லை உங்கள் நினைவு
ஆதரிக்க ஆயிரம் உறவுகளுண்டு
அனைத்துமே அடுத்தநாள் மறந்துபோகும்
அப்பா என்றழைக்க நீங்கள் இல்லையே!
உங்களில் நாம் கொண்ட உறவுதனை
எப்படி மறந்து நாம் வாழ்ந்திருப்போம்.
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

சோலையம்மன் கோயிலடி,
சாவகச்சேரி வடக்கு.
மீசாலை. (சி-39693)(26-15-45)

என்றும் ஈரவிழிகளுடன் சோகம் சுமக்கும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# சண்றைஸ் மெடி கிளினிக்
## யாழ்ப்பாணத்தில் SUN RISE MEDI CLINIC

**சிறப்பான வைத்திய சேவைக்கு உகந்ததோர் இடம்:**

★ யாழ்.போதனா வைத்தியசாலை MBBS டாக்டர்களின் வெளிநோயாளர் பிரிவு.
★ வாகன சாரதி அனுமதிப்பத்திர மருத்துவ அறிக்கை
★ ஆய்வுகூட பரிசோதனை ECG, X Ray
★ முழு உடற்பரிசோதனை.
★ அனுபவமிக்க வைத்திய நிபுணர்களின் தனியான கவனிப்பு
★ பல்வைத்திய சேவை / நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய பல்வைத்தியரின் சேவை.

❖ வைத்திய நிபுணத்துவ ஆலோசனை பெற்றுக்கொள்ளலாம்.
Specialist Consultation Centre
❖ ஆய்வுகூடத்தில் தினமும் நவீன கொம்பியூட்டர் மயமான இயந்திரங்கள் மூலமாக அனுபவம் மிக்கவர்களால் துல்லியமாக, சரியான பெறுபேறுகள்!

**வருகை தரும் வைத்திய நிபுணர்கள்**

1. குழந்தை வைத்திய நிபுணர் Paediatrician (தினமும் நண்பகல் / மாலை இரு தடவைகள்)
2. சத்திர சிகிச்சை நிபுணர்கள் Surgeons
3. பொது வைத்திய நிபுணர் Physicians
4. என்பு முறிவு நெரிவு சிகிச்சை நிபுணர் Orthopaedic Surgeon
5. கண் வைத்திய நிபுணர்கள் Eye Surgeons
6. மகப்பேற்று வைத்திய நிபுணர் Gynoecologist
7. உளநோய் மருத்துவ நிபுணர் Phychiastrict
8. தோல்வைத்திய நிபுணர் Dermatoligist








(யாழ்.மத்திய பஸ்நிலைய வைரவர் கோயிலுக்கு எதிரில்)
388, ஆஸ்பத்திரி வீதி முதலாம் மாடி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 6069.

(39720) UTHAYAN Graphics





*Journalism Awards 2004*

இலங்கை பத்திரிகை
ஆசிரியர்கள் சங்கம் (TEGOSL)
இலங்கை பத்திரிகை
ஸ்தாபனத்துடன் (SLPI)
இணைந்து ஒழுங்குபடுத்தும்
திறமையாளர்கள் 2004

விண்ணப்ப விதிமுறைகளை
ஜனவரி 1 ஆம் திகதி முதல்
பத்திரிகைகளில் எதிர்பாருங்கள்.

விருது வழங்கும் இரவு ஜூன் 2005

EXCELLENCE IN JOURNALISM AWARDS 2004

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

TEGOSL

# பேரானந்தப் பெருவாழ்வு தரும் சுவர்க்கவாயில் ஏகாதசி



மகாவிஷ்ணுவிற்கு உரிய சிறப்புமிக்க விரதங்களில் ஒன்றான சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்தக்கட்டுரை பிரசுரமாகின்றது.

மகாவிஷ்ணுவிற்குரிய விரதம் ஏகாதசி. விஷ்ணுவை முழுமுதற் தெய்வமாகக் கொள் வோர் வைஷ்ணவர்கள். வைஷ்ணவர்கள் வைதீக மரபிலும், பாஞ்சராத்ர, வைகானச ஆகம மரபிலும், சிவாகம மரபிலுமாக தமது மரபிற் கேற்ப வழிபட்டு முத்தியின்பம் பெறுவதை இலட்சியமாகக் கொண்டவர்கள். இவர்கள் பின்பற்றும் மரபுகளுக்கு சிறப்பாகவும் தனித் துவமாகவும் விளங்கும் அனுஷ்டான முறை கிரியைகள் என்றழைக்கப்படும். இக்கிரியை கள ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிவகுக்கின்றன.

ஆன்ம லக்ஷியம் அடையும் வழிவகை களை தத்துவ சாஸ்திரங்கள் எடுத்துக் கூற ஆனம லக்ஷியத்திற்குரிய வழிகாட்டி களாக புராண, இதிகாசங்கள் விளங்கு கின்றன. இவை வேள்வி, தபம், தீர்த் தம், தோத்திரம், தியானம், விரதம், பூஜை என்பன பற்றித் தெளிவுபடுத்து கின்றன. இதன் வழிமுறைகள் ஒன் றோடொன்று பின்னிப்பிணைந்த தன்மைகளுடையது. அதன்படி விர தம் என்பது தனித்துவமுடைய தாகிறது.

அவவகையுள் விஷ்ணுவை அடையும் பொருட்டு அனுஷ் டிக்கப்படும் சிறந்த விரதங்க ளுள் ஒன்றே ஏகாதசி விர தமாகும்.

பொதுவாக விரதம் என்பது தபத்தை ஒத் தது. தபத்தைப் போன்றே நிபந்தனைகளுக்குட்பட்டு அனுஷ்டான முறைகளை உள்ளகத்தே கொண் டது விரதமாகும். இவை இய ல்பு வாழ்க்கையிலுள்ள மனிதர்கள் உரிய காலங்களில் அவற்றிற்குரிய நிபந்தனைகள், ஆசார அனுஷ்டானஙகள் என்பவற்றைக் கடைப்பிடித்து பயனைப் பெறத்தக்க தனித் துவம் உடையன.

இந்து சமய மரபில் சைவம், வைஷ்ணவம் எனும் இரு பெரும் நெறியில் சைவம் சார்ந்த தன்மையில் வாழ்வில் உயர்பேறு சிவலோ கம் அடைதல் என்பதும், சிவனோடு கூடி வாழ தல் என்பதுமாகும். வைஷ்ணவ மரபில் சுவர்க் கம் அடைதல் என்பதை மட்டுமே குறிப்பிட்டுக் கூறுவது மரபாகும். அந்நிலையில் சிறப்புப் பெறும் ஏகாதசி விரதத்தில் சுவர்க்கவாயில் ஏகாதசி விரத சிறப்பினை நோக்குவோம்.

இந்து சமய மரபில் வாழ்வியலுக்குரிய வகையில் கிரியை சார்ந்த விடயங்களை எடுத் தியம்பும் தன்மையுடையதாக இதிகாசங்களும் புராணங்களும் விளங்குகின்றன. இவை கதை களாக இறையியலோடு கூறும் தன்மையுடைய னவாக விளங்குகின்றன.

இவற்றினை தெய்வீகவியல் வரலாறு என்று அழைப்பது மரபு. அதன்படி ஏகாதசி விரத வரலாற்றினை பவிஷ்யோத்தர புராணம், அக்னி புராணம், ஸ்காந்த புராணம், பத்ம புரா ணம், நாரத புராணம் மற்றும் கல்ப சூத் திரங்கள் என்பன கூறி நிற்கின்றன. இதை விட தமிழ் மரபில் ஏகாதசிப் புராணம் எனும் நூலும் கூறுகின்றது. இவையே காலத்தின் முக்கியத்துவத்தையுணர்த்தி பக்ஷமும் திதியும்

ஸ்ரீவத்ஸ.வ.இராஜேஸ்வரக்குருக்கள்
பிரதமகுரு
ஸ்ரீவேங்கடேச வரதராஜப்பெருமாள்
தேவஸ்தானம், யாழ்.வண்ணை.

இணையும் சிறப்புடன் ஏகாதசி விரதத்திற் குரிய கால நிர்ணயத்தினை தெளிவுபடுத் துகின்றன.

தெய்வீகயியல் வரலாற்றின்படி கிருதயுகத் தில் முரன் என்ற அசுரன் தேவர்களுக்கும் நல்லோர்களுக்கும் பெரும் துன்பங்களைக் கொடுத்தான். தேவர்கள் சிவனை சரணடைந் தார்கள். சிவன் திருமாலிடம் சரணடைந்தால் உங்களுக்கு விமோசனம் கிடைக்கும் என்றார். அவர்களும் அவ்விதமே செய்ய திருமால் அபயம் அளித்து தமது சக்கராயுதத்தை எடுத்து முரனுடன் ஆயிரம் ஆண்டுகள் போர் புரிந்தார். களைப்படைந்த திருமால் பத்திரி காச்சிரமம் சென்று அங்கு ஒரு குகையில் உறங்கினார்.

அங்கு சென்ற முராசுரன் மீண்டும் போர் புரிய வருமாறு திருமாலை அழைத்தான். அப் போது திருமாலின் ஆற்றல்கள் ஒன்று சேர்ந்து சக்தி வடிவம் தாங்கி அழகிய பெண்ணுருவில் வெளிப்பட்டன. அவள் அசுரனைப் பார்த்து நீயும், நானும் போரிடுவோம் எனக் கூறி சிரித் தாள். அச்சிரிப்பு அசுரன் முகத்தில் வெட்கத்தை ஏற்படுத்தியது. அந்த அசுரன் அவளுடன் சந்தோஷமாகப் பொழுதைக் கழிக்கவிரும்ப அவள் தனது ஹூம்காரத்தினால் அசுரனை எரித்தாள். சுகமாக நித்திரை விட்டெழுந்தார் திருமால். முராசுரனை எரித்த சக்திக்கு ஏகா தசி எனப் பெயரிட்டார்.

அவளை பதினொராவது திதியாக நிய மித்து இந்த ஏகாதசி திதியிலே விரதமிருந்து வழிபடுவோர்க்கு வைகுண்டம் அளிப்பேன் என திருமால் வரமளித்தார். மார்கழி மாத வளர் பிறை ஏகாதசியே முதலில் தோன்றியது. தாமஸ, ராஜச குணங்களின் வடிவமே முராசுரன். உயர்ந்த அறிவுப் பொருளாகவும் குணங்க ளுக்கு மேலானவனாகவும் விளங்குபவனே திருமால். திருமாலை உத்தேசித்து இந்த ஏகா தசியில் பக்தியுடனும், தூய்மையுடனும், உப வாசமாக விரதமிருந்து வழிபடல் விசேஷம். சிறுவர், கர்ப்பிணிகள், நோயாளர் தவிர்ந்த அனைவரும் இவ்விரதத்தை அனுஷ்டிக்கலாம். மார்கழி மாத வளர்பிறை ஏகாதசியே சுவர்க்க வாயில் ஏகாதசி, மோக்ஷ ஏகாதசி, பெரிய ஏகாதசி, ஆரம்ப ஏகாதசி எனப்போற்றப்படு கின்றது. விரதமனுஷ்டிப்போர் இவ் ஏகாதசி முதல் விரதத்தை கைக்கொள்ள வேண்டும்.


இந்நாளே தேவர்கள் அமிர்தம்பெற பாற் கடலைக் கடைந்த நாளாகும். மற்றும் பாரதப் போரிலே ஸ்ரீகிருஷ்ணர் பகவத்கீதையை அர்ச் சுனனுக்கு உபதேசித்ததும் இந்நாளிலேயே.

மாதங்களில் மார்கழியாக விளங்கும் உலக ரக்ஷகனாகிய ஸ்ரீமந் நாராயணனை இன் றைய சுவர்க்கவாயில் ஏகாதசித்தினத்தில் வணங்கி வறுமை, பிணி, பாவம், கன்மம் என் பவை நீங்கப்பெற்று பேரானந்தமான பெரு வாழ்வைப் பெறுவோமாக.

*தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்*
*-தொழுது வாயினால் பாடி*
*மனத்தினால் சிந்திக்க போயபிழையும்*
*-புகுதருவான் நின்றனவும்*
*தீயினில் தூசாகும் செப்பேலோரெம்பாவாய்.*

# அடுத்து பத்து ஆண்டுகளுக்கு சந்திரிகாவின் ஆட்சி தொடரும்!

## போர் வந்தால் இந்தியா உதவும்



"ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கு இந்த நாட்டை ஆள்வார். அதை யாராலும் தடுத்து நிறுத்தமுடி யாது.

"நாடாளுமன்றில் எமக்கு எதிராகச் சபா நாயகர் செயற்பட்டால் அடுத்த கணமே அவர் அப்பதவியில் இருந்து தூக்கியெறியப்படுவார்.

- இப்படிக் கூறுகிறார் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க.

காணி உறுதியற்றவர்களுக்குக் காணி உறுதி வழங்கும் வைபவம் கடந்த சனிக் கிழமை குருநாகல் மாவட்டத்தில் காணி மறு சீரமைப்பு மற்றும் சிறுதோட்ட அமைச்சின் ஏற் பாட்டில் நடைபெற்றது. அந்த வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரை யாற்றிய சமயமே அநுரா பண்டாரநாயக்க இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

எதிர்க்கட்சியினர் ஜனாதிபதித் தேர்தலைக் குறிவைத்து அதற்குரிய வேலைத் திட்டங்களில் இறங்கியுள்ளனர். ஜனாதிபதித் தேர்தலொன்று நடைபெறாது என்பதை அவர்கள் அறியமாட் டார்கள்.

ஜே.ஆரின் அரசமைப்பு இல்லாதொழிக்கப் படும். நாடாளுமன்றுக்கு முழு அதிகாரம் வழங் கப்படல் வேண்டும். நாட்டின் தலைவியோ தலைவரோ தமது கருமங்களை நாடாளுமன் றில் அமர்ந்து அங்குள்ள ஜனநாயக முடிவு களுக்கு ஏற்ப ஆற்றவேண்டும்.

இந்த நாட்டின் தேர்தல் முறை மாற்றிய மைக்கப்படும். ஜேர்மனியில் உள்ள தேர்தல் முறை இங்கு நடைமுறைக்கு வரும். ஜே. ஆரின் தேர்தல் முறை இந்த நாட்டுக்கு அவசி யமற்ற ஒன்று. நாம் பெரும்பான்மையான வாக் குகளைப் பெற்றபோதும் நாடாளுமன்றில் பெரும பான்மை பெற்ற ஓர் அரசாகத் திகழமுடிய வில்லை. இருப்பினும், அந்தக் குறைபாட்டை ஜனாதிபதி நீக்கிவிட்டார். இன்று எமக்கு நாடாளு மன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது. எமக்குத் தேவையான அரசியல் மாற்றங்களை நாம் ஏற்படுத்தமுடியும். விரை வில் அதை நாம் ஏற்படுத்துவோம்.

ஐ.தே.கட்சி நீதிக்குத் தலைவணங்க வேண்டும். எஸ்.பி.திஸநாயக்கவை விடுவிப் பதற்காக ஆர்ப்பாட்டமும், ஊர்வலமும் செய் யும் நிலைக்கு அக்கட்சி தள்ளப்பட்டுள்ளது. இது அக்கட்சியின் அரசியல் வங்குரோத்துத் தன்மையைக் காட்டுகிறது. ஜே.ஆர்.ஜெயவர்த் தனா எனது தாய்மீது பொய்க்குற்றச்சாட்டு களைச் சுமத்தி நாடாளுமன்றத்தில இருந்து அவரை வெறியேற்றியபோது அதைக் கண்டித்து நாம் ஊர்வலம் நடத்தவில்லை. 'ஜே.ஆர்.ஜெய வர்த்தனவே! உமக்குத் தேவையானதைச் செய்துகொள்!' என்று கூறிவிட்டு எனது தாய் நேராக வீட்டுக்கு வந்தார். அதற்குப் பின்னர் அவர் இரண்டு முறை இந்த நாட்டின் பிரதம ராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஒரு கையெழுத்துடன் ஒரே நேரத்தில் ஏழு நீதியரசர்களை ஜே.ஆர்.ஜெயவர்த்தன வீட்டுக்கு அனுப்பினார். நாம் அப்படிச் செய்ய வில்லை.

எமது குடும்பம் இந்த நாட்டை மாறிமாறி ஆட்சிசெய்துள்ளது. இருந்தபோதும் நீதித் துறையை நாம் மதித்தே வந்திருக்கின்றோம். எஸ்.பியைப் பார்த்து 'நீர் 'அடுத்த வருடம் சிறைச்சாலையில்தான் இருப்பீர்!" என்று கூறி னேன். ஏனெனில், அவர் செய்திருப்பது மகா குற்றம். எனவே, அதற்குரிய தண்டனை அவ ருக்குக் கிடைத்துள்ளது. நான் அவரது தீர்ப் புப் பற்றிக் கூறினேன் என்ற காரணத்தை வைத்து ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ என்ற ஐ.தே. கட்சி எம்.பி. எனக்கெதிராக வழக்குத் தொடர்ந்திருக்கிறார். நீதித்துறை பற்றி நான் ஒருபோதும் குறை கூறமாட்டேன்.

நாடாளுமன்றில் உள்ள எம்.பிக்களை ரணில் தூண்டிவிட்டு வேடிக்கை பாக்கிறார். மகேஸ்வரன் எம்.பி. இந்த நாட்டின் தலைவி யைக் கடுமையாகச் சாடுகிறார். அப்படியான ஒருவருக்குப் பாதுகாப்புத் தேவையில்லை.

ஏனெனில், புலிகளுக்குச் சார்பாகக் கதைக கும் அவருக்கு ஆபத்து யாராலும் வரப்போவ தில்லை.

### நாட்டின் புல்லைக்கூட பிரிக்க விடமாட்டோம்

இன்று இந்த நாட்டு அரசியலில் பெருந் தலை வர்கள் என்று கூறும் அளவுக்கு யாரும் இல்லை. அரசியல் குள்ளர்கள் மட்டுமே உள்ளனர்.

எனக்கும் பிரதமராகவோ அன்றி ஜனா திபதியாகவோ வரும் எண்ணம் கிடையாது. எதிர்க்கட்சியினரும் அவை பற்றி இனிக் கனவிலும் நினைக்கக்கூடாது. அப்படியொரு எண்ணம் இருந்தால் அதைச் சவப்பெட்டியில் போட்டுப் புதைத்துவிடும்படி அவர்களுக்குத் தெளிவாகக் கூறிவைக்கவிரும்புகிறேன்.

இனப்பிரச்சினைக்குப் பேச்சு மூலம் தீர்வு காணப்படவேண்டும். ஆனால், நாம் இருக்கும் வரை நாட்டில் இருக்கும் புல் - பூண்டைக் கூடப் பிரிப்பதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம்.

யுத்தம் ஒன்றுக்குச் செல்ல நாம் விரும்ப வில்லை. அது வலிந்து திணிக்கப்பட்டால் அதற்கும் தயார். எமக்கு உதவிசெய்ய இந் தியா தயாராகவிருக்கிறது. யுத்தமொன்று ஏற்பட்டால் அதற்கு நாம் முகங்கொடுப்பது குறித்து அவ் வேளையில் ஜனாதிபதி உரிய முடிவெடுப்பார்.

ஜே.வி.பி. மீது ஸ்ரீல.சு. கட்சியினர் குற்றஞ் சாட்டமுடியாது. எமது குறைகளை முதலில் நாம் நீக்கவேண்டும். எமக்கு மக்கள் வாக் களித்திருப்பது அரசியல் அதிகாரங்களைப் பயன்படுததுவதற்குத்தான் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும் - என்றார் அவர்.

(க-8)

# அனுமதி பெற்றவர்களின் விவரம் கிடைத்ததும் அவர்களுக்கு அறிவிக்கப்படும்

## பல்கலைக்கு புதிய மாணவரைச் சேர்ப்பது குறித்துத் தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு புதிய மாண வர்கள் இம்மாதம் 20ஆம் திகதி (நேற்றுமுன் தினம்) அனுமதிக்கப்படுவர் என கடந்த சில நாள்களுக்கு முன்னர் சில ஊடகங்களில் வெளி யான செய்திகளையடுத்து மாணவர்கள் குழப் பமடைந்தனர்.

கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாண வர்கள் இம்மாதம் 20ஆம் திகதி பல் கலைக்கழகத்தில் அனுமதிக்கப்படுவர் என்று சில ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்தன. இதனை அடுத்து பல்கலைக்கழக அனுமதி கிடைத்திருந்த மாணவர்கள் குழப்பமடைந்து தமக்கு எதுவித தகவலும் கிடைக்கவில்லையே என அங்கலாய்த்து உண்மை நிலையை அறிவதற்காக யாழ்.பல்கலைக்கழகத்துக் குப் படையெடுத்தனர்.

முதற்தொகுதியாக மருத்துவ பீடத்திற்குத் தெரிவான மாணவர்களின் பெயர்விவரங்களே கிடைக்கப்பெற்றிருப்பதாகவும் ஏனைய பீடங்க ளுக்குத் தெரிவான மாணவர்களின் பெயர் விவரங்கள் இதுவரை தமக்குக் கிடைக்க வில்லை என்றும் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

அனுமதி பெற்றவர்களின் பெயர்விவரங் கள் கிடைத்தவுடன் உடனடியாக சம்பந்தப்பட் டவர்களுக்குத் தெரியப்படுத்தப்படும் எனவும் - மாணவர்கள் இதையிட்டு குழப்பமடைய வேண் டிய அவசியம் இல்லை எனவும் தெரிவிக்கப் பட்டதையடுத்து மாணவர்களின் குழப்பம் தீர்ந்தது.

மருந்துவபீடத்திற்குத் தெரிவாகிய மாண வர்களிற்கான பதிவுகள் இம்மாதம் 29ஆம், 30ஆம் திகதிகளில் காலை 9மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை மேற்கொள்ளப்படவுள் ளன என்றும்- இம்மாணவர்களுக்கான விரி வுரைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 3ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன என்றும் யாழ்.பல் கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோக னதாஸ் தெரிவித்துள்ளார்.

ஏனைய பீடங்களிற்குத் தெரிவான மாண வர்களுக்குரிய பதிவுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் களுக்கான விரிவுரைகள் அநேகமாக எதிர்வரும் ஜனவரிமாத இறுதியில் ஆரம்பிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(4-12)

## எஸ்.பிக்கு நேற்றுமுன்தினம் கண்சிகிச்சை

சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்க விற்கான கண்சிகிச்சை நேற்றுமுன்தினம் காலைமுதல் பிற்பகல் வரை ஸ்ரீஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டது. சிகிச்சைக்குச் சென்ற எஸ்.பி.திஸநாயக்கவிற்கு வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து வைத்தியசாலைவரை மேலதிக பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. வைத்தியசாலையில் எஸ்.பியைப் பார்வையிட அவரது மனைவி தமராவிற்கு அனுமதி வழங்கப்பட்டது.

வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டாலும் சிகிச்சையின் பின்னர் திஸநாயக்க சிறைச்சாலைக்குத் திரும்ப வேண்டுமெனவும், அவசியப்பட்டால் மாத்திரம் வைத்தியசாலை யில் தங்கியிருக்க அவர் அனுதிக்கப்படுவார் என்றும் சிறைச்சாலை ஆணையாளர் றூமி மர்சூக் நேற்று முன்தினம் தெரிவித்தார். நேற்று முன்தினம் மாலை சிகிச்சை முடிந்து எஸ்.பி ஆஸ்பத்திரியிலேயே தங்கியிருந்தார். (க-4)




## இரண்டாவது வருட இதய அஞ்சலி

மலர்வு 20 - 03 - 1947

உதிர்வு 14 - 12 - 2002



### திருமதி நாகேந்திரம் நாகேஸ்வரி

திதி: ஏகாதசி

ஒளியாக எமக்கு வழிகாட்டி
சரரணடு கடந்துவிட்டது அம்மா!
இன்றும் உங்கள் நினைவாக உள்ளோம்.

913, நாவலர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை.

(39865)(12-13-45-42)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மகிழ 12 - 08 - 1917

மனம் நெகிழ 22 - 12 - 2002



### திருமதி அக்கினஸ் சின்னப்பு

(இளைப்பாறிய ஆசிரியை).

வாழ்வின் கலங்கரை விளக்காய்
வையகத்தில் வந்துதித்த தாயே!
மாண்புடன் நாம் வாழ வழிகாட்டிய தெய்வமே!
இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன
ஆறவில்லை எம்துயர்
ஈரவிழி இன்னும் காயவில்லை!
இரண்டு ஆண்டுகள் என்ன எத்தனை ஆண்டுகள்
ஆனாலும் உங்கள் நினைவுகள்
என்றென்றும் அழியாது!

இல: 41. வேம்படி வீதி.
யாழ்ப்பாணம். (39884)(12-13-45-42)

-உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

| இரண்டாம் ஆண்டு | 18ஆம் மாதம் | 20ஆம் ஆண்டு |
|---|---|---|



### அமரர் தம்பு அமிர்தலிங்கம்

பூவுலகில் 24-08-1923 விண்ணுலகில் 12-12-2002

எமது குல முதல்வனே ஐயா!
அல்லும் பகலும் ஓய்வின்றி உழைத்து
எம்மை ஆளாக்கி வளர்த்த தெய்வமே!
இப்போது நிரந்தரமாய் ஓய்வுவேண்டிச் சென்றதேனோ?
உங்கள் திருமுகம் காண ஏங்குகின்றோம் ஐயா!
எத்தனை பிறவி எடுத்தாலும் நீங்காது உங்கள் முகம்
உங்கள் வரவுக்காய் சொர்க்க வாசல் திறந்திருக்கும்.



### திருமதி அமிர்தலிங்கம் யோகம்மா

பூவுலகில் 26-02-1929 விண்ணுலகில் 03-06-2003

அன்பின் வடிவமே! எம் தாயே!
பத்துத் திங்கள் எம்மை சுமந்து பெற்றாயம்மா
குறையெதுவுமின்றி எம்மைக்காத்து
வளர்த்தீர்கள்!
எம்மைவிட்டுச் செல்ல எவ்வாறம்மா
மனம் வைத்தீர்கள்?
எப்போதம்மா நாம் உங்களைக் காண்பது
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
இறைவனை இறைஞ்சுகின்றோம்...



### அமரர் T.A.செல்வக்குமாரன்

(முன்னாள் ஆங்கில ஆசிரியர்,
மன்னார் நறுவிலிக்குளம் றோ.க.பா.)

அன்னையின் மடியில் 09-12-1959 அரக்கரின் பிடியில் 22-12-1984

அன்புச் செல்வமே! செல்வக்குமாரா!
ஆண்டுகள் 20 சென்றதையா!
உம்மைப் போல் நல்லார் இங்கில்லையென
இறைவனும் உம்மைத் தனக்குத் துணையாக
அழைத்துச் சென்றானோ?
ஏங்குதையா எம் நெஞ்சம்!
உம் மலர்ந்த முகத்தைக் காண்பதற்காய்
ஆண்டவனை நோகின்றோம்?

தற்போதைய முகவரி:
T.A.இராசகுமாரன்,
வி.எம்.றோட்,
பருத்தித்துறை

உங்கள் பிரிவால் வாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்.

நிரந்தர முகவரி:
T.A இராசகுமாரன்,
வடக்குத் தெரு,
தொண்டமானாறு.

உன் பிரிவால் வாடும்:
அக்காமார், அத்தான்மார், அண்ணன்மார், அண்ணிமார்,
தங்கை, தம்பிமார், மருமக்கள்: சசிகலா, சர்மிளா,
செல்வக்குமார், செந்தூரன். பேறாமகன் ஜெயந்திரன்.
பேரன் கஜா, பேத்தி பார்கவி.

(39897)(42-13-45)

# பூநகரி - மன்னார் வீதி புனரமைக்கப்படவில்லை

ஜெயபுரம்,டிசெ.22

வதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பூநகரி - மன்னார் வீதி சுமார் 20 ஆண்டுகளாகச் சீராகச் செப்பனிடப்படாது காணப்படுகின்றது.

இதனால், தினமும் முல்லைத்தீவில் இருந்து மடு வரைக்கும் பேருந்துச் சேவை நடைபெறுகின்றது. இப்பேருந்துச் சேவையானது மிகவும் சீரற்ற வீதியின் ஊடாக நடைபெறுகின்றது. இவ்வீதியில் செம்பன் குன்று பகுதியில் பாரிய குன்று ஒன்று வீதிக்குக் குறுக்கே காணப்படுகின்றது.

அதேவேளை, பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பாரிய ஆறுகளில் ஒன்றான மண்டைக்கல் ஆற்றுப் பாலம் சீராகச் செப்பனிப்படாததால் மூன்று இடங்களில் பாலப்பகுதியில் பாரிய குழிகள் காணப்படுகின்றன. இதனால் போக்குவரத்துக்குப் பெரும் அசௌகரியம் ஏற்படுகின்றது அத்துடன், நாச்சிக்குடா 3ஆம் கட்டைப் பகுதியில் பாரியகுழி ஒன்று காணப்படுகின்றது.

பல்லவராஜன்கட்டு வீதியிலும் குழிகள் காணப்படுகின்றன. இவ்வாறு பூநகரி மன்னார் வீதி மோசமான நிலையில் காணப்படுவதால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே உரியவர்கள் இதுவிடயத்தில் கவனம் செலுத்தவேண்டுமெனப் பொதுமக்கள் கோரியுள்ளனர். (8-403)

# வெள்ளத்தால் பாதிப்புற்றோருக்கு இலவச மருத்துவ சேவை

பரந்தன்,டிசெ.22

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையினர், கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் வெள்ளப்பாதிப்புக்குட்பட்ட நோயாளர்களுக்கு இலவச மருத்துவ சேவையினை வழங்கிவருகின்றனர்.

புளியம்பொக்கனை, நாகேந்திரபுரம், நாகேஸ்வரா பாடசாலைகளிலும் முருகானந்த பாடசாலையிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து தங்கியுள்ளவர்களுக்கே மருத்துவ சிகிச்சைகளும், மருந்துகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

இதனைவிட, கிணறுகளுக்குக் குளோரின் இடும்பணியும் இடம்பெற்றது. கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கக் கிளையின் உதவி நிர்வாக அலுவலர் மாணிக்கராசா தலைமையில் டாக்டர் எஸ்.குணரட்ணத்தினால் இச்சிகிச்சைகள் வழங்கப்பட்டன. இவர்களுடன் கண்டாவளை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஏ.எஸ்.லெஸ்லி மற்றும் இப்பகுதி மருத்துவ மாதுக்களும் இணைந்து இச்சேவையை வழங்கினர். (8-352-204)

# மறவன் மாஸ்டருக்கு புதுக்குடியிருப்பில் அஞ்சலி

புதுக்குடியிருப்பு,டிசெ.22

புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்திலும் லெப்டினன்ட் கேணல் மறவன் மாஸ்டரின் வித்துடல் வைக்கப்பட்டு அஞ்சலிகள் இடம்பெற்றன.

மாவீரர் பணிமனையைச் சேர்ந்த இனியவன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஈகச்சுடரினை கடற்புலிகளின் மகளிர்படைத் தளபதி வேங்கையும், வித்துடலுக்கான சுடரினை கடற்புலிகளின் தளபதி மங்களேசும் ஏற்றினர்.

இந்நிகழ்வில் புதுக்குடியிருப்புக் கிராம சேவையாளர் வீ.கனகசுந்தரசுவாமி, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், அரசியல் துறையைச் சேர்ந்த பூரணி ஆகியோர் அஞ்சலி உரைகள் நிகழ்த்தினர். (8-203-353)

# 'நியாப்' திட்ட அபிவிருத்திப் பணிக்கு முல்லைத்தீவில் 25 கிராமங்கள் தெரிவு

ஒட்டுசுட்டான்,டிசெ.22

முல்லைத்தீவு மாவட்டத்தில் 'நியாப்' திட்டத்தின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 25 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு செயலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கரைதுறைப்பற்றில் ஆறுமுகத்தான் குளம், புதறிகுடாமுறிப்பு, முள்ளியவளை கிழக்கு-

ஒட்டுசுட்டான் பகுதியில் பணிக்கன்குளம், நீதி புரம், பழம்பாசி, சின்னச்சாளம்பன், தண்டுவான், கரிப்பட்டமுறிப்பு, புலுமச்சினாதிகுளம், கற்குவாறி, பெரியஇத்திமடு, சிவநகர், திருமுறிகண்டி -

புதுக்குடியிருப்பில் தேவிபுரம், இளங்கோபுரம், குரங்கிருப்பான், மந்துவில் -

மாந்தை கிழக்குப் பகுதியில் அம்பாள்புரம், வன்னிவிளாங்குளம், நாட்டான்குளம், துணுக்காய், ஆலங்குளம், உயிலங்குளம், அனஞ்சியன்குளம் ஆகிய கிராமங்களே அபிவிருத்திக்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வேலைத்திட்டத்தில் கற்சிலைமடு கிராமம் உள்ளடக்கப்படாமை குறித்து அப்பகுதிப் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (8-341)

# விவசாயம், கால்நடை வளர்ப்பு தொடர்பான பயிற்சி வகுப்பு

கிளிநொச்சிப் பொருண்மிய மதியுரையகத்தினால் கிளிநொசசி மாவட்ட உருத்திரீஸ்வரபுரத்தில் 20 பயனாளிகளுக்கான விவசாயம், கால்நடை வளர்ப்புத் தொடர்பாகப் பயிற்சி வகுப்பு ஒன்று அண்மையில் நடைபெற்றது.

இப்பயிற்சியின் மூலம் இக்கிராமத்தைச் சேர்ந்த 10பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களும் 14வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்ட 10 பயனாளிகளும் பயன் பெற்றுள்ளனர்.

இந்நிகழ்வின் ஆரம்ப வைபவம் இக்கிராமத்தில் உள்ள கானகன் முன்பள்ளியில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தலைமையுரையினை நிறுவன மாவட்ட இணைப்பாளர் விஜேந்திரா வழங்கினார். அதனைத் தொடர்ந்து சிறப்புரைகள், கருத்துரைகள் நடைபெற்றன. இதன் பின் பயிற்சி வகுப்பினை இம்மாவட்டக் கால்நடை வைத்தியர் கௌரிதிலகர் ஆரம்பித்து வைத்தார். இதன்போது அவர் கால்நடை வளர்ப்புத் தொடர்பாக பல கருத்துக்களை வழங்கினார். இதனைத் தொடர்ந்து நிறுவனத்தின் திட்ட அலுவலர் பிரதாப் விவசாய நடவடிக்கைகளுக்கான பயிற்சிகளை ஆரம்பித்துவைத்தார். (8-405)




# ஒலுமடு பிரதேச சபையின் புதிய கட்டடம் திறப்பு

ஒட்டுசுட்டான்,டிசெ.22

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது முற்றாக அழிக்கப்பட்ட முல்லை மாவட்டத்திலுள்ள ஒலுமடு பிரதேச சபைக் கட்டடம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு கடந்த மாதம் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு பிரதேச விசேட ஆணையாளர் செ.தயானந்தா தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச்சுடரினை முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமியும் தமிழீழத் தேசியக் கொடியினை ஒலுமடுப் பிரதேசப் பொறுப்பாளர் பருதியும் ஏற்றிவைத்தனர். பெயர்ப்பலகையை ஒட்டுசுட்டான் பிரதேசச் செயலாளர் செல்வி சுபாஜினி கந்தையா திரை நீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரைகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (8-341-204)

# கடை உடைத்துத் திருட்டு

பரந்தன்,டிசெ.22

விசுவமடுப் பிரமந்தனாறு கிராமத்திலுள்ள கடையொன்று கடந்த 12ஆம் திகதி இரவு உடைக்கப்பட்டு அங்கிருந்து பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பாகக் கடை உரிமையாளர் விசுவமடு காவல்துறையிடம் முறைப்பாடு செய்திருந்தார் எனவும் காவல்துறையினர் புலன் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேக நபர்களைக் கைதுசெய்ததுடன் அவர்களிடமிருந்து களவாடப்பட்ட 15ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை மீட்டெடுத்தனர் என்றும் இது தொடர்பான வீசாரணைகள் தொடர்ந்தும் நடைபெற்றுவருவதாகவும் தெரியவந்துள்ளது. (8-203-352)

# குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு

ஒட்டுசுட்டான்,டிசெ.22

தொடர் மழையினால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கை அடுத்து கிணறுகளுக்குள் வெள்ளநீர் உட்புகுந்துள்ளமையால் குடி தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தாழ்வான பகுதிகளிலும் ஆற்றோரங்களிலும் உள்ள கிணறுகளை வெள்ளம் மூடியுள்ளதால் தொற்றுநோய்கள் பரவலாம் என அஞ்சப்படுகிறது. (8-341-204)

# கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரிப்பு

பரந்தன்,டிசெ.22

பரந்தன் - முல்லைத்தீவு வீதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதால் போக்குவரத்தில் ஈடுபடுவோர் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வீதிகளின் குறுக்கே நாய்கள் ஓடி வருவதால் விபத்துக்கள் ஏற்படுவதுடன், நாய்க்கடிக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்நாய்களை அழிக்க அல்லது கட்டி வளர்க்க, பிரதேச சபையினர் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (8-352-204)

# இடம்பெயர்ந்து வசிக்கும் மக்களுக்கு வீடமைப்பு வசதி

வேரவில்,டிசெ.22

தீவகம், வலிகாமம் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து முழங்காவில் பண்டிதர் குடியிருப்பில் வசிக்கும் மக்களுக்கு இசற்.ஓ.ஏ. நிறுவனத்தின் அனுசரணையுடன் பூநகரி முழங்காவில் அபிவிருத்தி நிறுவனத்தினால் 109 குடும்பங்களுக்குத் தற்காலிக வீடுகள் அமைப்பதற்கான பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் இப்பகுதி மக்களுக்கு மேற்படி நிறுவனத்தினால் உணவு தவிர்ந்த ஏனைய பொருள்கள் வழங்கியதுடன் மாவீரர் தினத்தன்று மாவீரர்களின் நினைவாக வீடமைப்புக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் இடம்பெற்றது. இந்நிகழ்வு அப்பகுதிக் கிராம அலுவலர் நகுலேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. அடிக்கல்லைப் பூநகரிப் பிரதேச செயலர் திரு. சிறிஸ்கந்தகுமார் நாட்டி வைத்தார். இந்நிகழ்வில் பயனாளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டார்கள். (8-404)



ஒட்டுசுட்டான் பிரதேசத்திலிருந்து மணலாறுப் பகுதி சிலோன் தியேட்டருக்குப் போராளிகளுக்கான உலர் உணவு கொண்டு சென்ற ஒட்டுசுட்டான் பிரதேசக் குழுவினரை மணலாறு கட்டளைத் தளபதி இரா.மகேந்தி உட்பட துணைத் தளபதி, பொறுப்பாளர், கட்டளை நிர்வாகப் பொறுப்பாளர் சிறப்புப்படையணிப் பொறுப்பாளர், நெடுங்கேணி அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் வரவேற்றபோது எடுக்கப்பட்ட படம். *(படம் : ஒட்டுசுட்டான் செய்தியாளர்)*

# கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு காவல்துறையினர் வேண்டுகோள்

கிளிநொச்சி,டிசெ.22

கட்டாக்காலியாக வீதிகளில் திரியும் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு தமிழீழக் காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

அண்மைக்காலமாக கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளினால் ஏ-9 நெடுஞ்சாலையில் விபத்துக்கள் ஏற்பட்டுவருகின்றன.

இவ்விபத்துக்களினால் பலர் படுகாயமடைந்தும் இறந்தும் உள்ளதுடன் சொத்துக்களுக்குச் சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

இதனால் கட்டாக்காலிகளாக வீதிகளில் திரியும் கால்நடைகளை உரியவர்கள் உடன் பிடித்துக் கட்டிவளர்க்குமாறும் விபத்துக்கள் ஏற்படாது தவிர்க்க எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் தமிழீழக் காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (8-204)

# பூநகரி சந்தைப் பகுதி பராமரிப்பற்ற நிலையில்

ஜெயபுரம்,டிசெ.22

பூநகரிப் பிரதேச சந்தைப் பகுதியில் கழிவுப் பொருள்கள் சீராக அகற்றப்படுவதில்லை. சந்தைக் கழிவுகள் சந்தைக்கு அருகாக காணப்படும் பூநகரி ஒல்லாந்தர் கோட்டைப் பகுதியில் கொட்டப்படுகின்றன. இதனால் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவி தொற்றுநோய்கள் பரவும் வாய்ப்பும் காணப்படுகின்றது.

இதேபோல் நாச்சிக்குடா, ஜெயபுரம் சந்தைப் பகுதிகளும் சீராக பராமரிக்கப்படாமல் காணப்படுகின்றன.

இவ்வாறு சந்தைகள் சீராக பராமரிக்கப்படாமையால் சந்தைப் பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது எனவும் அண்மையில் பெய்த பாரிய மழை காரணமாக அப்பகுதியில வெள்ள நீர் தேங்கி நிற்பதையும் காணமுடிகின்றது.(8-403)

# காலபோக வேளாண்மை பாதிப்பு

ஒட்டுசுட்டான்,டிசெ.22

கடந்த ஒன்றரை மாத காலத்திற்கு மேலாகப் பெய்த கடும் மழை வெள்ளம் காரணமாக 2004 - 2005 காலபோக வேளாண்மை ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பாதிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் 2ஆயிரத்து 561 ஏக்கர் நெற்செய்கையும் 831 ஏக்கர் உப உணவுச் செய்கையும் அண்ணளவாக அழிந்துள்ளதாக ஒட்டுசுட்டான் பிரதேசச் செயலகப் புள்ளிவிவரம் தெரிவிக்கின்றபோதிலும் இதன் தொகை இன்று கூடுதலாகும். அதுமட்டுமல்ல ஏழை விவசாயிகளின் வாழ்விடங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

அடுத்த கட்ட நடவடிக்கை என்ன, என ஏங்கி நிற்கும் விவசாயிகளுக்குக் கமநலச் சேவை உதவி ஆணையாளர், அரசிடமிருந்து நஷ்டஈடுகளைப் பெற்றுத் தருவதற்கு ஆவன செய்யவேண்டுமென அனைத்து விவசாயிகளும் கோருகின்றனர். (8-341)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

Hero Honda Dawn விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 55/1, சீனியர் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். (39911)

ஆரம்பக்கல்வி தரம் 1 முதல் தரம் 5 வரையான வகுப்புகளில் பாடவிரிவாக்கம் பாடப் பதிவுகளை மேற்கொள்ளக் கலண்டர், விடயத் திறன் அட்டவணை கொண்ட அச்சடித்த புத்தகங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 077 6633121. (39903)

வியாபார ஸ்தாபனங்களுக்கும், வீட்டுப் பாவனைக்கும் உகந்த திண்டுக்கல் இரும்புப் பெட்டிகள் (IRON SAFE) தேவையான அளவுகளில் விற்பனைக்கு இருக்கின்றன. தொடர்பு: இல.13, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (39923)

Digital 3CCD வீடியோ கமெரா விற்பனைக்குண்டு. Model No. NV-MX350 EG Panasonic தொடர்பு: ஐ.விஜயரட்ணம், புதுறோட், கொக்குவில் மேற்கு, கொக்குவில். T.P.: 0702503132. (39928)

## வீடு விற்பனைக்கு

கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு, உப தபாற்கந்தோருக்கு அருகில் அமைந்துள்ள 3 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தரகர் இல்லாமல் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். தொடர்பு: T.P.: 077 6619927, 011 2382116. (39902)

## காணி விற்பனைக்கு

வண்ணார்பண்ணை, பொன்னைப்பா ஒழுங்கையில் 1½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி 32, பிரப்பங்குளம் றோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் (39905)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 72இல் பிறந்த, உத்தரம் 4ஆம் பாதம், லக்கினத்தில் செவ்வாயுள்ள அழகிய மணமகளுக்குப் பொருத்தமான மணமகன் தேவை. உள்நாடு, வெளிநாடு விரும்பத்தக்கது. விளம்பர இலக்கம்: 2458, மே/பா, உதயன். (39883)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி உடன் சுத்தஞ்செய்து பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39829)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம். புறொயிலர், கல்பேட் கூடிய நிறையில் தினமும் சுத்தஞ்செய்து கொடுக்கப்படும். தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி. (39933)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

அழகான Great Dane நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர்), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39831)

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

தரமான Prima Broiler குஞ்சுகள் விற்பனைக்குண்டு. அத்துடன், வளர்ந்த பேட்டுக்குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39830)

## சேவை

55,000 அமெரிக்க விசா லொதர் (Green Card) விண்ணப்பிக்க முடிவு திகதி டிசெம்பர் 31. தாமதத்தைத் தவிர்க்க விண்ணப்பதாரர் மனைவி, பிள்ளைகள் சகலரதும் முழுப்பெயர்கள், பிறந்தநாள்கள், விலாசத்தையும் எழுதி, 2"x2" சகலரதும் போட்டோக்களுடனும் ரூபா 300/- மணியோடருடனும் அனுப்பவும். தொடர்பு: PENGUIN BOOK SHOP, B2, F23, Bloemendhal Flats, Hotahena. T.P.: 077 3081764, 2438367. (C/39861)

## சங்கிலியன் மன்றத்தில் பௌர்ணமி விழா

யாழ்ப்பாணம்,டிசெ.22

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் பௌர்ணமித் தின நிகழ்வுகள் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5மணிக்கு சட்டநாதர் கோயில் முன்றிலில் உள்ள மனறக் கலையரங்கில் நடைபெறவுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான என்.ரவிராஜ், எஸ்.கஜேந்திரன் மற்றும் மா.க.ஈழவேந்தன், முன்னாள் மாநகர ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொள்வர்.

சிறப்பு நிகழ்வாக சி.வேலாயுதம் தலைமையில் 'என்று தணியும் சுதந்திர தாகம்' எனும் தலைப்பில் கவியரங்கமும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (ஐ-13)

## புதுமுக மாணவருக்கு கலந்துரையாடல்

2005ஆம் ஆண்டு கற்கை நெறிகளுக்குத் தெரிவுசெய்யப் பட்டிருக்கும் அனைத்துப் புதுமுக மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் இன்று புதன்கிழமை காலை 9.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறவுள்ள இக்கலந்துரையாடலில் சகல மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு தொழில்நுட்பக் கல்லூரி பகல்நேர மாணவர் மன்றம் அறிவித்துள்ளது.(ஐ-173)

## சொக்கனின் நினைவாக அஞ்சலி உரை

மூதறிஞர் சொக்கலிங்கத்தை (சொக்கன்) நினைவுகூரும் வகையில் அஞ்சலியுரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்த் தேசிய சேவையில் இன்று இரவு 9.30 மணிக்கு ஒலிபரப்பப் படவுள்ளது.

அஞ்சலியுரையை சப்ரகமுவ பல்கலைக் கழக மொழியியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் கனகசபாபதி நாகேஸ்வரன் நிகழ்த்துவார். (எ-12)


## VACANCIS

**Institute of Micro Systems. (IMS)**
**Computer Training Center**

எமது நிறுவனத்தின் மானிப்பாய், நீர்வேலி ஆகிய கிளைகளுக்கும் அச்சுவேலியில் புதிதாகத் திறக்கப்பட இருக்கும் கிளைக்கும் பின்வரும் வேலைகளுக்கு ஆள்கள் தேவை.

1) Trainee Instructor (Male / Female)
2) Trainee Typist (Male / Female)

மேற்படி உள்ள வேலைகளுக்கு விண்ணப்பிப்போர் தமது சுயவிவரக்கோவையை 30-12-2004 இற்கு முன்னதாக நேரடியாகவோ, தபால் மூலமாகவோ கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

(39921)(26-15-45)

**IMS, Market Lane, Manipay.**


## 5ஆம் ஆண்டு நினைவலைகள்

மடியில் முத்தாக... 20 - 02 - 1976



மண்ணில் வித்தாக... 22 - 12 - 1999

வீரவேங்கை தனம்
**நாகராசா தனஞ்சயன்**
அச்சுவேலி தெற்கு, யாழ். (விக்ரர் விசேட கவச எதிர்ப்புப் பிரிவு)

"நெஞ்சிருக்கும் வரை நெருப்பாய் - உன்
நினைவிருக்கும்
அதுவரை நிம்மதியற்று - என்
உயிரிருக்கும்"

இவருடன்,
மேஜர் அல்பேட், கப்டன் பவான்,
கப்டன் புகழரசன், கப்டன் வேல்விழி,
லெப். ஜனார்த்தனன், வீரவேங்கை எழில்நிலா
ஆகிய மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. — என்றும் உன் நினைவுடன் சுதா.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி றோசம்மா பஸ்ரியாம்பிள்ளை

இளவாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி றோசம்மா பஸ்ரியாம்பிள்ளை கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பஸ்ரியாம்பிள்ளை (பொடிமாஸ்ரர், இளைப்பாறிய ஆசிரியர், புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை) அவர்களின் அன்பு மனைவியும் அருட்சகோதரி சோபியா (திருக்குடும்பக் கன்னியர் சபை), யோசவ்நாயகம் (ஆசிரியர் புனித அந்தோனியார் பாடசாலை, பாஷையூர்), திருமதி லூர்துநாயகி செல்வநாயகம் (பெல்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற S.செல்வநாயகம், திருமதி I.திரேசபெல் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22-12-2004) புதன்கிழமை அவரது இல்லத்தில் இருந்து மாலை 4.30 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு, புனித அன்னாள் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டு, புனித அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கல்லூரி வீதி,
இளவாலை.
(39927)(26-15-45)

தகவல்:
அருட்சகோதரி சோபியா
(மகள்).

## இளையதம்பி இராமலிங்கம்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், அல்வாய் வடமேற்கில் வசித்தவருமாகிய இளையதம்பி இராமலிங்கம் 19.12.2004 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் சறோஜினிதேவி (கறுசிலைமடு), பூலோகசவுந்தரி (பிரான்ஸ்), சகுந்தலா (ஹொலண்ட்), தர்மதாஸ் (நோர்வே), இந்திராணி (பிரான்ஸ்), சிவதாஸ் (ஹொலண்ட்), ஜெயதாஸ் (ஹொலண்ட்), மயூரவதனி (அமரர்), மோகனதாஸ் (பிரான்ஸ்), குகதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், மயில்வாகனம், தர்மராஜா, கனகேந்திரராசா, விஜயலட்சுமி, குனேந்திரம், சிவனேஸ்வரி, கோமதி, சுமித்திரா, பாலசெல்வதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜனனி, டஸ்னி, நிறஞ்சன், நிர்மலன், நிறோசினி, சோபினி, சுபாசினி, றமணன், தாரணி, ராகவன், சுதர்சன், றமணன், நளாயினி, சுகந்தினி, சாந்தினி, கிரி, சாமினி, பாமினி, ஷாலினி, நிலானி, லக்சனி, சுகந்தன், பிரியணி, தர்ஷன், விதுஷன், அர்ஷயா, சௌமினி, இஷானி, ஷம்யுத்தா ஆகியோரின் அன்புப் பேரனும் தனுஷ், ரிஷி ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2004) புதன்கிழமை பற்பகல் 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

T.P:- 060 2212805.
(சி-39950) (12-15-45-26)

தகவல்: மனைவி, பிள்ளைகள்.


## கிறிஸ்மஸ் புத்தாண்டு மலிவு விற்பனை

யாழ்.நகர மக்களே! ஓர் அரிய வாய்ப்பு

டிசெம்பர் 5ஆம் திகதிமுதல் 31ஆம் திகதிவரை.

நீங்கள் வாங்கும் சகல பொருள்களுக்கும் விசேட கழிவு வழங்கப்படும்.
நாளை என்று தள்ளிப்போடாமல் இன்றே விரையுங்கள்.

26.12.2004 ஞாயிறு தினம் கடை திறந்திருக்கும்.

**லைடன் புடவை நிலையம்**

இல.410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 2381 (C/39952)(26-15-45)



## பழுது பார்த்தல்

T.V., Video, VCD, DVD, LD, CD
செட்டல் எம்பிலியயர்ஸ், சற்டலைட்ஸ், Car stereo, இயந்திரங்களை VCD யாக மாற்றுதல்.



*40 தொழில்நுட்ப வல்லுநர்கள்
*30 வருட அநுபவம்
*ஒரு வருட உத்தரவாதம்
*ஒரே நாளில் துரித சேவை

**DURST ELECTRONICS (PVT) LTD.**
364, Galle Road,
Kollupitiya, Col-3.
Tel: 2575480, 2565756
Opp.P.G. Martin & H.N.B.
Near Tourist Hotel Renuka. On Sea side



## போட்டோ சொப் தெரிந்தவர்கள் தேவை

பிரபல கலர் ஆய்வுகூடம் ஒன்றிற்கு போட்டோ சொப் தெரிந்தவர்கள் தேவை. விண்ணப்பிப்பவர் சுயமாகப் படங்களைச் சீர்செய்து வடிவமைக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். ஆரம்பகாலப் பயிற்சி அளிக்கப்படும். சுய விவரத்துடன் அடையாள அட்டையின் போட்டோப் பிரதியையும் இணைத்து 30-12-2004 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: (39888)(26-15-45)

விளம்பர இல. 2459,
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.



## வேலைக்கு ஆள்தேவை

ஒலியமைப்புச் செய்வதற்கு ஆள்கள் தேவை. முன்அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. யாழ்.மாநகரசபை, நல்லூர் பிரதேசத்திற்குள் வசிப்பவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

மினி மகாலிங்கம்
நாச்சிமார் கோயிலடி,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(39926)


## எட்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 24 - 03 - 1944



உதிர்வு 21 - 12 - 1996

அமரர் **முத்துச்சாமி மகாலிங்கம்**
திதி: 22-12-2004 (ஏகாதசி)

*பாசமும் நேசமும் கொண்ட பண்புமிக்க தந்தையே!*
*வாசமலர் தூவி நாம் வணங்கியே துதிக்கின்றோம்*
*எட்டாண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு*
*மறையவே மறையாது.*

53. பெரியதம்பிரான் கோயில் வீதி.
வண்ணார்பண்ணை.
யாழ்ப்பாணம். (சி-39891)(26-15-45) - குடும்பத்தினர்.


## சித்திரம்

☆ A/L Paper Class
☆ 2006 A/L
☆ தரம் 06
தொடக்கம்
தரம் 11 வரை
ஆகிய பிரிவுகள்
ஆரம்பமாகியுள்ளன!

**IAT** சித்திரப் பயிற்சி நிறுவனம்
ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்.
(39925)

# திருமண பந்தத்தில் இணைகிறார் முரளி



கொழும்பு,டிசெ.22

பிரபல சுழற்பந்து வீச்சாளரும் இலங்கை கிரிக்கெட் அணியின் சிரேஷ்ட வீரருமான முத்தையா முரளிதரன் எதிர்வரும் மார்ச் மாதத்தில் திருமண பந்தத்தில் இணையவுள்ளார்.

பெற்றோரால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்ப்பெண் ஒருவரையே இவர் கரம் பற்றவுள்ளார்.

தற்போது 32 வயதாகும் முரளிதரன் மட்டுமே இலங்கைக் கிரிக்கெட் அணியில் விளையாடும் சிரேஷ்ட வீரர்களில் இதுவரை திருணம் செய்து கொள்ளாதவராவார்.

1992 ஆம் ஆண்டில் தமது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையை ஆரம்பித்த முரளிதரன், டெஸ்ட் போட்டிகளில் இதுவரை 532 விக்கெட்டுக்களையும் ஒரு நாள் போட்டிகளில் 366 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளார்.

# 500 விக்கெட்டுக்களை வீழ்த்துவதே எனது அடுத்த இலக்கு - மக்ராத்



பேர்த்,டிசெ.22

டெஸ்ட் போட்டிகளில் 500 விக்கெட்டுக்களை வீழ்த்துவதே தனது அடுத்த இலக்கு என்று ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் மக்ராத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிராக இடம் பெற்ற டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் 24 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய தன் மூலம் ஆஸ்திரேலியாவின் இரண்டாவது சிறந்த பந்துவீச்சாளர் என்ற பெருமையைப் பெற்றுள்ள மக்ராத் தன் வெற்றி தொடர்பாகக் கூறுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய அணியின் ஆர்தர் மெய்லி 1920 - 1921 காலப்பகுதியில் இங்கிலாந்துக்கு எதிரான ஒரு போட்டியில் 121 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்களை வீழ்த்தி முதலிடத்தில் உள்ளார்.

எனக்கு இப்போதைக்கு ஓய்வுபெறும நோக்கம் எதுவும் இல்லை. டெஸ்ட் போட்டிகளில் 500 விக்கெட்டுக்களை வீழ்த்திய வோல்ஸ், வோர்ன், முரளிதரன் ஆகியோரின் வரிசையிலே நானும் இடம்பெற முடியும் என்று நம்புகின்றேன். அதுவே, எனது அடுத்த இலக்கு. 2007 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டியில் விளையாடுவதற்குக் காத்திருக்கின்றேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

34 வயதாகும் மக்ராத் டெஸ்ட் போட்டிகளில் 472 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

இந்தப்போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் இரண்டு விக்கெட்டுக்களை மக்ராத் வீழ்த்தியிருந்தால் கும்ளே, ஜிம்லேகர் ஆகியோரின் வரிசையில் ஒரே இன்னிங்ஸில் 10 விக்கெட்டுக்களை வீழ்த்திச் சாதனை படைத்திருப்பார்.(10-202)

# இந்திய அணியுடனான டெஸ்ட் மூலம் முகமட் அஷ்ரபுல் நட்சத்திர அந்தஸ்து



மும்பை,டிசெ.22

இந்திய-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையே நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஆட்டமிழக்காமல் 158 ஓட்டங்களை எடுத்ததன் மூலம் பங்களாதேஷ் அணியின் துடுப்பாட்ட வீரர் முகமட் அஷ்ரபுல் நட்சத்திர அந்தஸ்தைப பெற்றுள்ளார் என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

சுழல் பந்து, வேகப்பந்து என்ற வித்தியாசமின்றி சகல பந்துகளையும் இவர் எதிர்கொண்ட விதத்தையும் துணிவையும் பார்த்தபோது பரப்பரப்பாகவும் விறுவிறுப்பாகவும் இருந்தது.

இவர் தனது சதத்தை நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் 'ரிவர்ஸ் ஸ்விப்' அடித்ததைப் பாராட்டமல் இருக்க முடியாது. இந்த இளம் வீரருக்கு வளமான எதிர்காலம் உள்ளது. இந்தப் போட்டி நிச்சயம் இவருக்கு திருப்ப முனையாக இருக்கும்.

இரண்டாவது இன்னிங்ஸில் சற்று முன்னதாக இவர் களமிறங்கியிருந்தால் இரண்டாவது இன்னிங்ஸிலும் அதிக ஓட்டங்களை எடுத்திருக்கலாம். ஆனால் அவ்வாறு களமிறங்காமல் தாமதமாகக் களமிறங்கி 3 ஓட்டங்களை மட்டுமே எடுத்தார்.

முதல் இன்னிங்ஸில் நீண்ட நேரம் களத்தில நின்றமையால் இவர் ஓய்வெடுத்துவிட்டு இரண்டாவது இன்னிங்ஸில் தாமதமாகக் களம் இறங்கியதாக அவரது அணி நிர்வாகிகள் தெரிவித்தனர். ஆனால் அது தவறு என்றே நான் கருதுகின்றேன். 20 வயதான ஒரு இளம் வீரர் நான்கு மணிநேரம் களத்தில் நின்றதற்கு ஓய்வு தேவை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அவர் தாமாகவே முன்வந்து இரண்டாவது இன்னிங்ஸில் ஆரம்பத்திலேயே களமிறங்கியிருக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

## ஒருநாள் போட்டிகள் நாளை ஆரம்பம்

சிட்டகாங், டிசெ.22

இந்திய - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் அடுத்த இரு போட்டிகளும் எதிர்வரும் 25ஆம், 26ஆம் திகதிகளில் பகலிரவுப் போட்டிகளாக நடைபெறவுள்ளன. (10)

# பலமற்ற பங்களாதேஷ் அணியுடனான டெஸ்ட் தொடரை வென்றது இந்திய அணி

சிட்டகாவ்,டிசெ.22

பங்களாதேஷ் அணியுடனான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்திய அணி கைப்பற்றியுள்ளது.

இத்தொடரின் முதல் போட்டியில் வெற்றியீட்டியிருந்த இந்திய அணி இரண்டாவது போட்டியிலும் ஒரு இன்னிங்ஸாலும் 83 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியதன் மூலம் தொடரைக் கைப்பற்றியுள்ளது.

இப்போட்டியின் முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 540 ஓட்டங்களை எடுத்தது. அணியின் சார்பில் ராகுல் ட்ராவிட் 160 ஓட்டங்களையும் கௌதம் காம்பீர் 139 ஓட்டங்களையும் அணித்தலைவர் சௌரவ் கங்குலி 88 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் முகமட் ரபீக் 4 விக்கெட்டுக்களையும் மோர்ட்டுஸா 3 விக்கெட்டுக்களையும் நஸ்முல் 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.



தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 333 ஓட்டங்களை எடுத்தது. அணியின் சார்பில் முகமட் அஷ்ரபுல் ஆட்டமிழக்காமல் 158 ஓட்டங்களை எடுத்தார். பந்துவீச்சில் அனில் கும்ளே 4 விக்கெட்டுக்களையும் இர்பன் பதான், சகீர்கான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதனால், 'பலோ ஒன்' நிலைக்குத் தள்ளப்பட்ட பங்களாதேஷ் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸிக்காகத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடி 124 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது. பந்துவீச்சில் இர்பான் பதான் 5 விக்கெட்டுக்களையும் கும்ளே, ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக முகமட் அஷ்ரபுல் தெரிவானார். ஆட்டத் தொடர்நாயகனாக இர்பான் பதான் தெரிவுசெய்யப்பட்டார்.(10)




## சர்வதேச மரதன் போட்டி: கென்ய வீரர்கள் முதலிடம்

புனே,டிசெ.22

புனேயில் நடந்த சர்வதேச மரதன் ஓட்டப் போட்டியில் கென்ய நாட்டின் டக்ளஸ் வொன்கி வொண்டர் முதலிடம் பெற்றுத் தங்கம் வென்றுள்ளார். இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள புனேயில் 19 ஆவது சர்வதேச மரதன் ஓட்டப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இப்போட்டியில் 25 நாடுகளைச் சேர்ந்த முன்னணி வீரர்கள் உட்பட 30 ஆயிரம் பேர் கலந்துகொண்டனர். பெண்களுக்கான போட்டியிலும் கென்ய நாட்டைச் சேர்ந்த ஜனிமுலா முதலிடம் பெற்றுத் தங்கம் வென்றார். (10)

## மீண்டும் சர்ச்சையில் ஹர்பஜனின் பந்துவீச்சு

லண்டன்,டிசெ.22

ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சு குறித்து மீண்டும் சர்ச்சை எழுந்துள்ளது. இவரது 'தூஸ்ரா' முறையிலான பந்துவீச்சு தொடர்பாக சந்தேகங்கள் கிளப்பப்பட்டுள்ளன. இது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் சபையிடம் முறைப்படி புகார் செய்யப்பட்டுள்ளது.

சுழற் பந்துவீச்சாளர்களின் 'தூஸ்ரா' முறை குறித்து அவ்வப்போது சந்தேகம் தெரிவிக்கப்படும். இவ்வகையில் பந்து வீசும் போது பந்தானது வலதுகைத் துடுப்பாட்ட வீரர்கள் அடிக்க முடியாதபடி அதி விரைவாக சுழன்று செல்லும்.

இப்பிரச்சினையில் சமீபத்தில் இலங்கையின் முரளிதரன் தடையைச் சந்திக்க நேரிட்டது. இப்போது ஹர்பஜன் சிக்கிக்கொண்டுள்ளார்.

பங்களாதேஷ்க்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போது ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சு குறித்து கண்காணிக்கப்பட்டது.(10)

## சர்வதேச மத்தியஸ்தர்கள் யாழ்.வருகின்றனர்

யாழ்ப்பாணம்,டிசெ.22

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் கனடா நாட்டில் வசிக்கும் சர்வதேச உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களான எம்.கணேஸ என்.காந்தன், ஆகியோர் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

யாழ்ப்பாணம் வருகை தரும் இவர்கள் வடக்கு-கிழக்கு உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான கருத்தரங்கையும் பயிற்சியையும் எதிர்வரும் 26 ஆம், 27 ஆம், 28 ஆம் திகதிகளில் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடத்தவுள்ளனர்.

இப்பயிற்சியில் கலந்துகொள்ளும் மத்தியஸ்தர்களுக்கு சான்றிதழ்களும் உத்தரவாத்ப்பட்டிகளும் தகுதி அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம், வலிகாமம், பருத்தித்துறை உதைபந்தாட்ட 'லீக்குகளின் மத்தியஸ்தர்களை இக்கருத்தரங்கிலும் பயிற்சிகளிலும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பாளர் வி.மாதுளன் கேட்டுள்ளார். (10-190)

# இந்திய - பங்களாதேஷ் டெஸ்ட்தொடரில் முத்திரை பதித்த சில வீரர்கள்



சிட்டகாவ்,டிசெ.22

பங்காளதேஷ் அணியுடனான டெஸ்ட் போட்டித் தொடர் இந்தியாவுக்கு வெற்றியைத் தேடித்தந்த அதே நேரத்தில் இத்தொடரின் மூலம் தனிப்பட்ட சில வீரர்களும் சிறப்புப் பெற்றுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற முதல் நாள் ஆட்டத்தில் சதம் அடித்ததன் மூலம், டெஸ் போட்டிகளில் விளையாடும் அனைத்து நாடுகளிலும் சதம் அடித்த முதல் வீர் என்ற சிறப்பை இந்தியாவின் ராகுல் ட்ராவிட் பெற்றார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் ட்ராவிட்டுக்கு அது 18 ஆவது சதமாக அமைந்தது. இதன் மூலம் இந்திய வீரர்களின் சதப்பட்டியலில் திலீப் வெங்சர்க்காரை பின்னுக்குத் தள்ளி 4 ஆவது இடத்திற்கு உயர்ந்தார் அவர். வெங்சர்க்கார் 17 சதங்களை அடித்துள்ளார். சச்சின், கவாஸ்கர் ஆகியோர் 34 சதங்களையும் அஸாருதின் 22 சதங்களையும் அடித்துள்ளனர்.

புதிய வீர் கௌதம் காம்பீர் டெஸ்ட் கிரிக்கெட்டில் முதல் சதத்தை அடித்தார். தென் ஆபிரிக்காவுக்கு எதிராக இந்தியாவில் நடைபெற்ற போட்டியில் 4 ஓட்டங்களில் அவர் சதத்தை இழந்தது குறிப்பிடத்தக்கது.

இளம் வீர் இர்பான் பதான் இப்போட்டியின் இரண்டு இன்னிங்ஸ்களிலும் மொத்தமாக 18 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதுடன் ஆட்டத் தொடர் நாயகன் விருதையும் பெற்றுக்கொண்டார்.

முகமட் அஷ்ரபுல் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிகபட்ச ஓட்டங்களைக் குவித்த பங்களாதேஷ் வீரர் என்னும் சிறப்பைப் பெற்றார். 20 வயதாகும் முகமட் அஷ்ரபுல் முதல் இன்னிங்ஸில் 158 ஓட்டங்களைக்குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.



2000 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு எதிராக நடைபெற்ற முதல் டெஸ்ட்டில் அமினுல் இஸ்லாம் 145 ஓட்டங்களைச் சேர்த்திருந்ததே இதற்கு முன்பு வரையிலான பங்காளதேஷ் வீரரின் அதிகபட்சமாக இருந்தது.

டெஸ்ட் போட்டிகளில் இதுவரை ஒருமுறை கூட பங்காளதேஷ் வெற்றி பெறாவிட்டாலும் சிறந்த வீரர்களை அந்த அணி படிப்படியாக இனங்கண்டு வருகின்றது என்பதற்கு அடையாளமாகியுள்ளார். 21 வயதாகும் வலது கை வேகப்பந்துவீச்சாளர் மோர்ட்டுஸா.

இவரது அசத்தலான வீச்சில் ட்ராவிட் இரண்டு முறை ஆட்டமிழந்தது குறிப்பிடத்தக்கது. (10)

# மக்ராத்தின் அபார பந்து வீச்சுக்கு மண்டியிட்டது பாகிஸ்தான் அணி

பேர்த்,டிசெ.22

ஆஸ்திரேலிய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் டெஸ்ட் போட்டித் தொடரின் முதலாவது டெஸ்ட்டில் ஆஸ்திரேலிய அணி 491 ஓட்டங்களினால் வெற்றியீட்டியுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய பாகிஸ்தான் அணி, முதலில் ஆஸ்திரேலிய அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு கேட்டுக்கொண்டது. இதற்கமையக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 381 ஓட்டங்களை எடுத்தது. அணியின் சார்பில் ஜஸ்ரின் லாங்கர் 191 ஓட்டங்களையும் கில்கிறிஸ்ட் 69 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சொகைப் அக்தர் 5 விக்கெட்டுக்களையும் முகமட் சமி 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் கஸ்பரோவிச் 5 விக்கெட்டுகளையும் ஷேன்வோர்ன் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 5 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 361 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது.

டேமியன் மார்ட்டின் ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்களையும் அணித்தலைவர் பொண்டிங் 98 ஓட்டங்களையும் ஜஸ்ரின் லாங்கர் 97 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் டனிஸ் கனேரியா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

563 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி பெறலாம் என்ற இலக்குடன் தனது இரண்டாவது இன்னிங்ஸில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி மக்ராத்தின் பந்து வீச்சுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் 72 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பந்து வீச்சில் மக்ராத் 8 விக்கெட்டுக்களையும் கஸ்பரோவிச் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் 9 ஓட்டங்களால் இரட்டைச் சதத்தையும் இரண்டாவது இன்னிங்ஸில் 3 ஓட்டங்களால் சதத்தையும் தவறவிட்ட ஜஸ்ரின் லாங்கர் ஆட்டநாயகன் விருதைப் பெற்றுக்கொண்டார். (10)

# கிழக்கில் இயல்புநிலை திரும்புகிறது

மட்டக்களப்பு,டிசெ.22

கிழக்கில் மட்டக்களப்பு - அம்பாறை - திருகோணமலை மாவட்டங்களில் கடந்த மூன்று தினங்களாக மழை முற்றாக குறைந்துள்ளது. வெள்ளம் வேகமாக வடிந்துவருகின்றது. இதனையடுத்து சுமார் ஒருவாரமாக வெள்ளத்தில் தத்தளித்த கிழக்கு மாகாணம் தற்போது வழமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றது.

வீதிகளில் இருந்து வெள்ளம் முற்றாக வடிந்துள்ளதால் போக்குவரத்துச் சேவைகள் யாவும் தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளன. மட்டக்களப்பு, கல்முனை மற்றும் அம்பாறை நகரங்களில் இருந்து தூர இடங்களுக்கான தனியார் மற்றும் அரச போக்குவரத்துக்கள் யாவும் தற்போது வழமைபோன்று இடம்பெற்றுவருகின்றன.

அரச அலுவலகங்கள் யாவும் வழமை போன்று இயங்க ஆரம்பித்துள்ளன.

இதேவேளை, தாழ்ந்த குடியிருப்புப் பிரதேசங்களில் இருந்து வெள்ளம் வடிந்துள்ளதால், அகதிகளாக பொது இடங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடைந்திருந்த மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பிவருகின்றனர்.

### மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் அகதிகளாக இடம்பெயர்ந்திருந்த சுமார் 4,000 குடும்பங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பிவருகின்றன என மாவட்ட அரச அதிபர் வே.சண்முகம் தெரிவித்தார்.

எனினும் சித்தாண்டிப் பிரதேசத்தில் வெள்ளம் முற்றாக வடியாததால் சித்தாண்டி மத்திய மகாவித்தியாலயத்தில் அகதிகள் தொடர்ந்தும் தங்கியிருக்கின்றனர் எனவும் அவர் கூறினார்.

நவகிரி குளத்தை அண்டியுள்ள பிரதேசங்களிலும் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் மக்கள் மீளக் குடியமரமுடியாத நிலை காணப்படுகின்றது.

கடும் வெள்ளத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்பாலான வீதிகள் மிக மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றன. இதனால் போக்குவரத்துக்களை மேற்கொள்வதில் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

மட்டக்களப்பு - கல்முனை நெடுஞ்சாலை மற்றும் மட்டக்களப்பு - பொலன்னறுவை நெடுஞ்சாலை ஆகியன நீரரிப்பினால் வெகுவாகச் சேதமடைந்துள்ளன.

வெள்ளத்தினாலும், கடும் காற்றினாலும் சில பிரதேசங்களில் நூற்றுக்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன. இவ்வாறான வீடுகளைத் திருத்துவதற்கு அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் நிவாரண உதவிகளை வழங்கிவருகின்றன.

அகதிகளாக இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கை இன்னும் இயல்பு நிலைக்குத் திரும்பாததால் இவர்களுக்குத் தொடர்ந்தும் நிவாரணங்களை வழங்கவேண்டியுள்ளதாக அரச அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் பிரகாரம் பாதிக்கப்பட்டவர்களுக்கு பல்வேறு பொது நிறுவனங்களினதும், அரசினதும், அரச சார்பற்ற நிறுவனங்களினதும் நிவாரண உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்பட்டுவருகின்றன.

### திருகோணமலை

திருகோணமலையிலும் வெள்ளம் வடிந்துவருகின்றது. காலநிலை பகலில் கடும் வெயிலாகவும் இரவு வேளையில் பனியினால் மிகவும் குளிராகவும் இருக்கின்றது.

வெள்ளம் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த போக்குவரத்துச் சேவைகள் சில மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மழையினால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக திருகோணமலை மாவட்டத்தின் சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் சுமார் 30 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய வட்டாரங்கள் தெரிவித்தன.

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், கிண்ணியா, ஈச்சிலம்பற்று, தம்பலகாமம், கந்தளாய், குச்சவெளி, புல்மோட்டை, மொரவெல, திருகோணமலை, அலஸ்தோட்டம் ஆகிய பகுதிகளே வெள்ளத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் உறவினர் இல்லங்களிலும் தங்கியிருந்த மக்கள் சொந்த இடங்களுககுத் திருப்பியுள்ளனர். (க-4-6)

## விவாதக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,டிசெ.22

புதிய இடதுசாரி முன்னணியின் ஏற்பாட்டில் 'தீர்ப்பைக் குப்பையில் போடு' என்னும் தலைப்பிலான விவாதக் கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

ஞானகிரி கொத்திகொட தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவிற்கு வழங்கப்பட்ட தண்டனை குறித்து கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன, லீனஸ் ஜயதிலக ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (10-202)

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய உப அதிபர்
திரு. சு.கோடீஸ்வரன்
அவர்களின் பாமிகு தாயார்

### திருமதி சுப்பிரமணியம் உமையாத்தைப்பிள்ளை

(இடைக்குறிச்சி, வரணி)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பதினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

*"உடம்பை தனித்தொழியப் புட்*
*பறந்தற்றே உடம்போடு உயிரிடை நட்பு"*

*யா/வரணி மகாவித்தியாலயம்*
*வரணி.* (சி/39961)(22-11-18)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

## புற்றுநோயாளருக்கு போக்குவரத்து வசதி

யாழ்ப்பாணம்,டிச.22

தெல்லிப்பழை புற்றுநோயாளர் சிகிச்சை நிலையம் மீண்டும் இன்றுமுதல் இயங்கவுள்ளது.

அங்கு சிகிச்சைக்குச் செல்லும் நோயாளிகளுக்கு விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் டாக்டர் இ.தெய்வேந்திரன் தெரிவித்தார்.

காலை 7.30 மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரை வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் சேவையிலீடுபடுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-13)

## ஒளி விழாக்கள்

கோப்பாய் பிரதேச செயலக நலன்புரிச் சங்கம் நடத்தும் வருடாந்த ஒளி விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், ஆசியுரையை அருட்தந்தை செலஸ்ரீன் அடிகளாரும், அருளுரையை வணபிதா ரி.ஜோர்ஜூம் நற்சிந்தனையை அருட்தந்தை அன்ரனி பாலா அடிகளாரும் நிகழ்த்துவர். (எ-72)

★ ★ ★

மட்டக்களப்பு திருமறைக் கலாமன்றம் நடத்தும் கிறிஸ்து பிறப்பு ஒளிவிழா நிகழ்வு 'மலரும் உறவுகள்' என்னும் தலைப்பில் இன்று மாலை 5 மணியளவில் மட்டக்களப்பு மகாத்மா காந்தி சிலையடி சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளில் அனைத்து மதங்களும் ஒன்றிணைந்து நடத்தும் நடனங்கள், பாடல்கள் உட்பட பல்வேறு கலை நிகழ்வுகளுடன் சிறப்பு நிகழ்வாக மட்டக்களப்பு திருமறைக் கலாமன்றத்தின் 'மலரும் உறவு' என்னும் நவீன நாடகமும் இடம்பெறவுள்ளது. (4-190)


Jayoda ஜயோதா ජයෝද

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6586310 முதல் 6599030 வரை
சீட்டிழுப்பு இல. 95 திகதி 20-12-2004

வெற்றி எண்கள் 0 5 5 4 3 1 சுப்பர் எண் 21

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,45,99,850/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,45,99,850/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 115 | 5,000/- | 5,75,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,113 | 500/- | 5,56,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,163 | 50/- | 5,58,150/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,10,586 | 10/- | 11,05,860/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 114 | 1,000/- | 1,14,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,116 | 100/- | 1,11,600/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,057 | 20/- | 2,21,140/- |
| மொத்தம் | 1,35,292 | | 53,89,850/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 53,89,850/-

இந்த வியாழக்கிழமை
சுப்பர் ஜக்பொட்
ரூ. 1,49,10,150/-

தொடர் இல. 7550458 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 டிசம்பர் 23 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான லட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

6597971-8-79
6593481-0-42
6597617-1-98
6592864-4-59
6592069-1-62
6591042-7-56
6588029-5-90
6590098-9-79


## தென்னங்கன்றுகள் விநியோகம்

வலி.மேற்கு,டிசெ.22

வலி.மேற்கு பிரதேச மக்களுக்கு 400 நல்ல இன தென்னங்கன்றுகள் பிரதேச செயலக திட்டமிடல் பகுதியினரால் விநியோகிக்கப்பட்டன.

வலி.மேற்கு பிரதேசத்திலுள்ள வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் மூன்று தென்னங்கன்றுகள் வீதம் ஒவ்வொரு தென்னங்கன்றும் 10 ரூபா வீதம் விநியோகிக்கப்பட்டது. (4-175)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னையா காந்திமதி



கரவெட்டி வடக்கு, வதிரியைச் சேர்ந்த திருமதி பொன்னையா காந்திமதி 18.12.2004 சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பெரியார் பொன்னையாவின் பாசமிகு மனைவியும் பொன் பாலச்சந்திரன் (பொன்முடி, பாலா) அவர்களின் அன்புத் தாயாரும் ஜெயதிலகா (செல்வி) அவர்களின் அன்பு மாமியாரும் மயூரா, உமாகாந்தினி, சோனியா பாரதி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.12.2004) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அவரது இல்லத்தில் இருந்து வதிரி ஆலங்கட்டை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*வதிரி,*
*கரவெட்டி வடக்கு.* (39930)(22-11-18)

தகவல்:
சிவப்பிரகாசம் இந்திராணி
(பெறாமகள்).

## கிட்டினன் தர்மலிங்கம்



முடக்காடு, நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டினன் தர்மலிங்கம்(ஆசிரியர், யா/ஞானசாரியார் கல்லூரி) அவர்கள் 19.12.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிட்டினன் செல்லம்மாவின் அருமைப் புதல்வனும் காலஞ்சென்ற கந்தையா - சீதேவியின் மருமகனும், லக்சுமியின் அன்புக் கணவரும் (மந்திகை ஆதார வைத்தியசாலை தாதி உத்தியோகத்தர்), லக்ஸ்மன், தர்சினியின் அன்புத் தந்தையும் (யாழ். ஹாட்லிக் கல்லூரி) மதுரத்தின் அன்புச் சகோதரனும், கிருஷ்ணபிள்ளையின் அன்பு மைத்துனனும், சங்கீதா (லண்டன்), தீபா, ஆனந்தசயனன்(யாழ். பல்கலைக்கழகம்) சிந்துஜா, ஷாமந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.12.2004 திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் வேரோண்டை இந்துமயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முடக்காடு,*
*நெல்லியடி.*
(39945)(22-11-18)

தகவல்:
சசிகரன் சங்கீதா
(மருமகள் - லண்டன்).

## சொக்கலிங்கம் துரைஐயா

(உரிமையாளர், கமலா ஸ்ரோர்ஸ், சந்திரன் பான்ஸி பலஸ், ஆனைக்கோட்டை)



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சங்கரப்பிள்ளை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் துரைஐயா அவர்கள் நேற்றுமுன்தினம் (20.12.2004) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சொக்கலிங்கம் - நாகம்மா தம்பதியின் அன்பு மகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் மனோன்மணி, கமலாதேவி, சரோஜினிதேவி, விமலாதேவி, நாகேஸ்வரி, சகுந்தலாதேவி, மகேஸ்வரி, பூமணி, நவஜோதி, ரஞ்சிதமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் இரவிச்சந்திரன், ரஞ்சிதமலர், பிறேமச்சந்திரன் (கமலா ஸ்ரோர்ஸ்), இராமச்சந்திரன் (சந்திரன் பான்சி பலஸ்), சாந்தினி, ஜெயந்தினி (லண்டன்), யாழினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சாமுண்டேஸ்வரி, விக்னேஸ்வரி, சாந்தினி (ஆசிரியை), சிவராசா (ஐங்கரன் புடைவையகம், கோண்டாவில்), சதீஸ்குமார் (லண்டன்), சிவனேந்திரன் (மகிஷா விற்பனையகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற நாகராசா, நாகம்மா மற்றும் பத்மநாதன், இராசலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் அமல்ராஜ், சகிலா, சந்திரகாந், சிந்துஜா, மிதுலா, நிரோஷன், மதுசா, சங்கவி, வேணிசா, பிரியங்கா, நிவேதா, சஞ்சீவன், சாருஜன், கிருஷிகா, மகிஷா ஆகியோரின் இணைபிரியாப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2004) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கல்லுண்டாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கரப்பிள்ளை வீதி,*
*ஆனைக்கோட்டை.* (39933)(33-11-18)

தகவல்:
குடும்பத்தினர்.

## கணபதிப்பிள்ளை சின்னத்துரை

பூநகரியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, கச்சாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சின்னத்துரை அவர்கள் நேற்று(21.12.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மகனும் தில்லையம்மாவின் அன்புக் கணவரும் உருத்திரமூர்த்தி, பரமநாதன், லோகநாதன், கோணேஸ்வரன், விக்கினேஸ்வரன், நந்தகுமார், சதீஸ்வரன் ஆகியோரின் தந்தையும் மங்கையர்க்கரசி, பவானி ஆகியோரின் மாமனாரும் விதுஷன், கம்சிகா, லக்சனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2004) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கச்சாய் வீதி,*
*சாவகச்சேரி.* (39948)(22-11-18)

தகவல்:
உருத்திரமூர்த்தி
(மகன்).

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 20 - 01 - 1967



மறைவு 21 - 12 - 2004

## தம்பிராஜா சந்திரகுமார்

தரணிதனில் கதிரவனாய் ஒளிதந்த குமாரே!
திடீரென நீர் மறைந்த செய்திகேட்டு பதறித்துடிக்கிறோமையா
உனக்கென வாழாது பிறர்க்கென ஓடி ஓடி உழைத்து
உருக்குலைந்து நின்ற நீர் திடீரென மறைந்த தேன்?
கொடுமை ஐயா! காலனுக்கு கண்ணில்லையா?
கோயில் கோயிலாக ஓடி ஓடி வணங்கும் உமக்கா! இக்கதி
நம்பமுடியவில்லையே! ஈசனடி சேர்ந்த
உன் ஆத்மா நற் சாந்தி பெறுவதாக

*21/3, முருகமூர்த்தி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (39952)(38-11-18)

சிவன்கோயிலடி
நண்பர்கள்.

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 30 - 07 - 1922



மறைவு 19 - 10 - 2004

## அமரர் சின்னவி சீனியர்

19.10.2004 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி அறிந்து உடன் வந்து எமக்கு ஆறுதல் கூறியோருக்கும் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிய எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்ற களைத் தெரிவிப்பதுடன் -

இன்று (22.12.2004) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மயிலங்காடு,*
*ஏழாலை தெற்கு, ஏழாலை.*
*(பழைய முகவரி:*
*புன்னாலைக்கட்டுவன்)* (39951)(22-38-11-18)

குணநாயகம்
(குணசிங்கம் - மகன்),
சிவசேகரன்
(சேகர் - மகன்).

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 - 11 - 1968



உதிர்வு 02 - 01 - 2004

## அமரர் நடராசா தவக்குமார் (தவா)

மங்காத விளக்காக – குடும்பத்துக்காக
அரும்பாடுபட்டு உழைத்து வந்தாய்
இடைநடுவிலே எங்களை எல்லாம்
தவிக்க விட்டு பிரிந்துவிட்டாய் – ஆனாலும்
எங்களுடன் கூடவே
வாழ்ந்துகொண்டு இருக்கின்றாய்.
உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
அம்பலவாணவேத விநாயகப் பெருமானை
பிரார்த்திக்கின்றோம்.

*மானிப்பாய் வீதி,*
*தாவடி.* (39970)(38-11-18)

-குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி சுப்பிரமணியம் உமையாத்தைப்பிள்ளை

இடைக்குறிச்சி, வரணியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் உமையாத்தைப்பிள்ளை அவர்கள் நேற்று (21.12.2004) செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமானார்.

அனனார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் கோடீஸ்வரன் (உப அதிபர் - வரணி மகாவித்தியாலயம்) மனோகரன் (மனோகரன் ஸ்ரோர்ஸ்- வரணி) ஆகியோரின் அருமைத் தாயாரும் திருமதி விஸ்வநாதன் சிவகாமிப்பிள்ளை அவர்களின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.12.2004) செவ்வாய்க் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொடிக்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இடைக்குறிச்சி,*
*வரணி.* (சி-39972)(38-11-18)

தகவல்:
குடும்பத்தினர்.


## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், இல. 43/1, பூநாறி லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவிலில் 2½ பரப்புக் காணி 4 அறைகளுடன் கூடிய புதுவீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகட்கு:
43/1, பூநாறி லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில்,
T.P:- 222 5102 (சி-39969)(38-11-18)

## ஆசிரியர் தேவை

யாழ்நகர் சுற்றாடலில் கல்வி நிறுவனம் ஒன்றில் A/L இந்து நாகரிகம், 9,10,11 ஆங்கிலம், சுகாதாரம் கற்பிக்க ஆசிரியர் தேவை.

T.P.:077 6623586 (39947)(38-11-18)

## உங்கள் கவனத்திற்கு...

யாழ்.மாநகரசபை எல்லைகக்குள் யாராவது 20.12.2004 அன்று உங்கள் கையடக்கத் தொலைபேசியை (Hand Phone) தவறவிட்டிருப்பின் உரிய அடையாளங்களைத் தெரிவித்துப் பெற்றுக்கொள்ளவும்.

தொடர்புகட்கு:
Ms.M.Krishnan
40/3, Temple Road, Chundikuli, Jaffna.
(39943)(38-11-18) 021-222.2472.

## ராஜா யாழ்ப்பாணம்

சரத்குமார், நிகிதா, வடிவேல் நடித்த

சத்ரபதி



காட்சிநேரம்:
10.30, 2.30, 6.30 (பு.நே.)

## நாதவ்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

குளிரூட்டப்பட்டது.
காட்சி நேரம்: 10.30, 2.30, மட்டும் (பு.நே.)
❑ விக்ரம், ❑ கிரன் நடித்த
ஜெமினி (ரீல்ஸ்)
தினசரி இரவு: 6.30 9.00 (பு.நே.)
ஆங்கிலப்படம் THE MUMMY RETURNS
(சி-39821)

## நிரஞ்சனாஸ் சங்கானை

❑ பிரசன்னா ❑ நவ்யா நடித்த
அழகிய தீயே (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
(சி-39051)

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக ❑ அர்ஜுன் (இருவேடம்) ❑ சாயாசிங் ❑ லைலா ❑ வடிவேல் நடித்த
தினசரி 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.)
ஜெய் சூர்யா



முற்பதிவுகளுக்கு நாகம்ஸ் சினிமா,
யாழ்.பெயின்ற் காடின், 326,K.K.S.றோட், யாழ்ப்பாணம்.
(C/39654)


# மரண அறிவித்தல்

## திருமதி சபாபதி பொன்னு



கேணியடி, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை தற்காலிக வசிபபிடமாகவும் கொண்ட சபாபதி பொன்னு அவர்கள் நேற்று (21.12.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் துரைராசா (சின்னமணி), அன்னலட்சுமி (அஞ்சி), காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (வேவி), வீரசிங்கம் (கட்டையர்), செல்லக்கிளி (கிளி) மற்றும் தேவி, மல்லிகாதேவி (குஞ்சு) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற செல்லையா(கோப்பாய்), செல்லையா (சுழிபுரம்) மற்றும் தம்பிஜயா (தம்பிராசா), சண்முகரத்தினம், வள்ளியம்மை, ஜெயராணி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற லட்சுமி , வைரமுத்து, குருநாதி, செல்லம்மா மற்றும் பொற்கொடி, அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சின்னக்குட்டி, வள்ளிப்பிள்ளை மற்றும் இளயதம்பி, ஆறுமுகம் குஞ்சுப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2004) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் சுன்னாகம் கொத்தியலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கந்தையா வீதி,*
*கந்தரோடை*
*சுன்னாகம்.*
(39955)

தகவல்:
மக்கள்,
மருமக்கள்.

# கண்ணீர் அஞ்சலி

அன்னையின் மடியில் 30 - 04 - 1934



இறைவன் பாதத்தில் 20 - 12 - 2004

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த

## அமரர் சொக்கலிங்கம் துரைஐயா

(கமலா ஸ்ரோர்ஸ், சந்திரன் பான்ஸி - உரிமையாளர்)

ஆலயங்கள் வேண்டி எம்மை ஆளாக்கி
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்டு
எம்மைக் கலங்கவிட்டதேனோ?

தகவல்:
(39953)(38-11-18) து.பிரேமச்சந்திரன் (மகன்).

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா சபாரத்தினம்

சுதுமலை அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சபாரத்தினம் அவர்கள் நேற்று (21.12.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் திருலோகச்சந்தர், மோகனசங்கர், ஜெனிதா, வனிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2004) புதன் கிழமை காலை 10.00 மணிக்கு இல.6, சென். ஆன்ஸ் ஒழுங்கை, மானிப்பாயில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

*இல. 6, சென். ஆன்ஸ் ஒழுங்கை,*
*மானிப்பாய்.* (39949)(38-18-11)

தகவல்:
ஜெனிதா யோகராசா
(மகள்).

## தம்பிராஜா சந்திரகுமார்



முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பிராஜா சந்திரகுமார் அவர்கள் நேற்று (21.12.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிராஜா- ரேவதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் சாந்தி(கொழும்பு), விஜயா (ஜேர்மனி) சூரியகுமார், இராசலஷ்சுமி செல்வமுருகன், உமாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பரணி நவரட்ணம் (கொழும்பு), அருணகிரிநாதன் (ஜேர்மனி), ஜெயந்தா, ரவிச்சந்திரன், பறேம்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் பவானி (கொழும்பு), கிரிசாந்தன் (கொழும்பு), றஞ்சித்குமார் (கொழும்பு), கிருஷ்ணவேணி (கொழும்பு), அபிராமி (ஜேர்மனி), அரவிந்தன் (ஜேர்மனி), அஜித் (ஜேர்மனி), பிரசாத், நிரோ, விதுஷா ஆகியோரின் மாமனாரும் சுரேக்கா, அருண்குமார், சானுஜா ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.12.2004) வியாழக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, முறபகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*21/3, முருகமூர்த்தி வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (39950)(22-38-11-18)

தகவல்:
குடும்பத்தினர்.

## தம்பையா இராஜகுலசிங்கம்

**(இளைப்பாறிய M.O. நீர்ப்பாசனத் திணைக்களம்)**



சிறுப்பிட்டியை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா இராஜகுலசிங்கம் அவர்கள் 20.12.2004 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் திரு.திருமதி தம்பையா தம்பதிகளின் புதல்வரும் திரு.திருமதி இராமலிங்கம் தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற ஈஸ்வரியின் கணவரும், திருமதி சின்னத்தம்பி, திருமதி சுந்தரம் (பவா - ஆஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான டாக்டர் சிவப்பிரகாசம், சிவஞானம் (நீர்ப்பாசனத் திணைக்களம்), கந்தசாமி, திருமதி சண்முகவடிவேல், திருமதி குலசிங்கம் (தாதி) ஆகியோரின் சகோதரனும் திருமதி இராஜேஸ்வரன் (இளைப்பாறிய T.A., நீர்பாசனத் திணைக்களம்), திருமதி இராஜேஸ்வரி, திருமதி இராஜமலர் (ஜேர்மனி), கணேஸ்வரன் (மோகன்), சிவராஜமனோகரன், நிஷாந்தன் ஆகியோரின் தந்தையாரும், சிவனேசன், ஸ்ரீ நடேஸ், திருமதி கீதா, திருமதி சாந்தி, திருமதி பானுமதி ஆகியோரின் மாமனாரும் சுறாஜ், சுமித்தா, நித்திலா, சுலக்ஷி, அபிருபன், முரளிகாந், பிரசாந்தி, திலக்ஷி, திலக்ஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2004) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.30 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மணியகாரர் லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (39954)(38-11-18)

தகவல்:
குடும்பத்தினர்

# எஸ்.பிக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்பை மீளாய்வு செய்ய 29ஆம் திகதி மனு

கொழும்பு, டிசெ.22

முன்னாள் அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான எஸ்.பி. திஸநாயக்கவிற்கு எதிராக வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பை மீள் பரிசீலனை செய்யுமாறு கோரும் மீளாய்வு மனு எதிர்வரும் 29ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

எஸ்.பி. திஸநாயக்கவை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் குழுவின் உறுப்பினர்களான ஜி.எல்.பீரிஸ், கே.என். சொக்ஸி, ஷிவ்லி அஸீஸ் மற்றும் பல முக்கிய சட்டத்தரணிகள் இதற்கான இறுதி ஆவணங்களைத் தயாரிக்கும் பணியை நிறைவு செய்திருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், ஒருவாரகால வெளிநாட்டுப் பயணத்தினை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் கட்சியின் முக்கியஸ்தர்களைச் சந்தித்து, எஸ்.பியின் விடுதலை தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைக் கேட்டறிந்துள்ளார்.

எஸ்.பியை போகம்பரை சிறைச்சாலைக்கு மாற்றப்போவதாக வெளிவந்திருக்கும் தகவல்கள் குறித்து ஆராயுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் பணிப்புரை விடுத்துள்ளார். (எ-க-4)

## புலிகள் - படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரங்கள், மக்களின் இயல்புவாழ்க்கை, மீள்குடியமர்வு, கடற்றொழில், விவசாயம் போன்ற விடயங்கள் குறித்துப் படைத்தரப்பினருக்குச் சுட்டிக்காட்டப்பட்டதாக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி சந்திப்பை முடித்துக் கொண்டு வெளியேறியபோது தெரிவித்தார்.

வடபகுதி உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் வானகுருவைக் கேட்டபோது, தற்போதைய சமாதான சூழ்நிலையைப் பற்றிக் கலந்துரையாடினோம் - என்றார் அவர்.

புலிகள் - படையினரின் நேற்றைய சந்திப்பையொட்டி நாவலர் வீதி, கோவில் வீதிப் பகுதிகளில் இராணுவத்தினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். (ஐ-7)

## தலை துண்டிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவிக்கப்பட்டது. வலதுபக்கத் தோள் மூட்டுப் பகுதியிலும் வெட்டுக்காயங்கள் காணப்பட்டன. சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்ட மன்னார் மாவட்ட நீதிவான் என்.எம்.எம். அப்துல்லா, சடலத்தை மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (4-12-164)

# பேச்சை உடன் ஆரம்பிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணாத் துயரங்களையும் அனுபவித்துள்ளார்கள். எனவே, யுத்த நிறுத்த உடன்படிக்கை மதிக்கப்படவேண்டும் என்றே நான் கேட்டுக்கொள்கின்றேன்" - என்றார் அவர்.

"பேச்சு மேசைக்கு இரு தரப்பினரும் -அரசும் புலிகளும் - மீண்டும் வரவேண்டும். சமாதான ஏற்பாட்டாளராகத் தொடர்ந்தும் நோர்வே சேவையாற்றும். இலங்கையிலுள்ள மக்கள் அனைவரும் சமாதானத்துடன் வாழவேண்டும். யுத்தத்தால் அழிவுற்ற பிரதேசங்கள் புனரமைக்கப்படவேண்டும். யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்கக் கூடாது. அதன் மூலம் தீர்வு ஒன்றினை எட்ட முடியாது. பேச்சு மூலமே தீர்வினை எட்டமுடியும்." - என்று நோர்வேப் பிரதமர் பொண்டவிக் மேலும் கூறினார்.

இதேவேளை, நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம் மூலம் அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால அனுப்பிய பேச்சுக்கான புதிய நிகழ்ச்சி நிரல் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைமை தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது என்று புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன்.

அதுபற்றிக் கருத்துத் தெரிவிப்பதற்கு முன்னர் புலிகளின் தலைமைப்பீடம் அதனை நுணுகி ஆராய்ந்து வருகின்றது என்று கருத்துத் தெரிவித்தன அந்த வட்டாரங்கள்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை நேற்றுமுன்தினம் அவரது லண்டன் இல்லத்தில் சந்தித்துப் பேசிய விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், அரசுத் தரப்பில் தயாரிக்கப்பட்ட பேச்சுக்கான புதிய நிகழ்ச்சி நிரலைப் புலிகளிடம் சமர்ப்பித்தார்.

இன்னும் ஓரிரு தினங்களில் அது தொடர்பான புலிகளின் நிலைப்பாடு தெரியவரும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-4)

## பட்டதாரிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான சரத் அமுனுகம, ரத்னசிறி விக்கிரமநாயக்க, ஜீவன் குமாரதுங்க, தினேஷ் குணவர்த்தன ஆகியோரும் கலந்துகொண்டனர். அங்கே இந்த உறுதிமொழியை ஜனாதிபதி வழங்கினார்.

அரச சேவையிலுள்ளவர்கள் அர்ப்பணிப்புடனும், நாட்டுப்பற்றுடனும் செயற்படவேண்டும். அரசியலைக் கடமையுடன் கலக்கக்கூடாது. அரச சேவை முற்றுமுழுதாக மறுசீரமைக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின்படி அடுத்த ஆண்டு முதல் அனைத்து அரச சேவையாளர்களக்கும் உள்ளகப் பயிற்சி வழங்கப்படும். அரச சேவையை வலுப்படுத்துவதற்கான திட்டங்களை அரசு வகுத்துள்ளது. - என்றார் ஜனாதிபதி. (க-4-12)

# ஜனாதிபதியின் சர்வாதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் எஸ்.பி. திஸநாயக்கவின் விடுதலை கோரி கொழும்பில் நடைபெற்ற பிரமாண்டமான பொதுக் கூட்டத்திலேயே ரணில் விக்கிரமசிங்க இப்படிக் கூறினார்.

கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இ.தொ.கா. சார்பில் அதன் உப தலைவர் இரா.யோகராஜன், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன், பெ.இராதாக்கிருஷ்ணன் எம்.பி., கொழும்பு மாநகர உறுப்பினர் கே.டி.குருசாமி, தேசிய அமைப்பாளர் சிவானந்தன், ஸ்ரீ.மு.கா. தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸ், பொதுச் செயலாளர் ஹசன் அலி ஆகியோருடன் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:-

எஸ்.பி.திஸநாயக்க ஒருமுறைதான் தனது கருத்தை வெளியிட்டுள்ளார். அதற்கான கருத்துச் சுதந்திரம் அவருக்கு உண்டு. அதற்காக அவர் தண்டிக்கப்பட்டுள்ளார்.

ஆனால், சந்திரிகா பண்டாரநாயக்க அநாகரிகமான முறையில் உயர்நீதிமன்ற நீதிபதிகளையும், பொலீஸ் துறையினரையும் விமர்சனம் செய்கின்றார்; கீழ்த்தரமாகப் பேசுகின்றார். அப்படியானால் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டிற்காகச் சிறையில் அடைக்கப்படவேண்டிய முதலாவது நபர் ஜனாதிபதியாகத்தான் இருக்கவேண்டும்.

ஜனாதிபதி தனிப்பட்ட திஸநாயக்கவைச் சிறையில் அடைக்கவில்லை. அதன்மூலம் எதிர்க்கட்சிகளுக்கும் ஜனநாயகத்திற்கும் மிரட்டல் விடுத்துள்ளார். அவருடைய மிரட்டல்களுக்கு நாம் ஒருபோதும் அடிபணியப்போவதில்லை.

இந்த நாட்டில் சட்ட வாக்க அதிகாரம் கொண்ட அதிசக்தியும் அதிகாரமும் கொண்டது நாடாளுமன்றமே. நீதிமன்றங்களால் நாடாளுமன்றத்தைக் கட்டுப்படுத்த முடியாது. எஸ்.பி. திஸநாயக்க ஏதாவது தவறான கருத்தைத் தெரிவித்திருந்தால் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினால் விசாரிக்கப்பட்டு, அதன்பின்னரே அவருடைய நாடாளுமன்ற உறுப்புரிமை தொடர்பாகத் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

ஆனால், ஜனாதிபதி தனக்கு வேண்டிய ஒரு நபரைத் தூண்டிவிட்டு உயர் நீதிமன்றத்தில் திஸநாயக்கவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தார்.

ஜனாதிபதியின் விதப்புரையின் பேரிலேயே எஸ்.பி.திஸநாயக்கவுக்கு இரண்டு வருடக் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இது ஓர் அரசியல் பழிவாங்கல் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. தனிமனித சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் ஜனநாயக உரிமை, அனைத்தும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் சந்திரிகா குமாரதுங்க மேலும் பத்து வருடங்களுக்கு ஜனதிபதியாக இருப்பார் என அவரது தம்பி கூறுகின்றார். சந்திரிகாவினால். இன்னும் ஒரு வருடம் கூட ஜனாதிபதியாக இருக்கமுடியுமா என்பது இன்று கேள்விக்குறியாகிவிட்டது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசைக் கவிழ்த்து பொய்யான வாக்குறுதிகளை வழங்கியே பதவிக்கு வந்தது இந்த அரசு, .இன்று மக்கள் முன் செல்லமுடியாமல் எதிர்க்கட்சிகள் மீது அடக்குமுறைகளை மேற்கொள்ள ஆரம்பித்து விட்டது.

இன்று நாட்டு மக்கள் கொதிப்படைந்து விட்டனர். ஒன்றுபட்ட மக்கள் சக்திக்கு முன் ஜனாதிபதியால் முகம்கொடுக்கமுடியாது. ஜனநாயகத்திற்கு மதிப்பளித்து எஸ்.பி.திஸநாயக்காவை விடுவிக்கவேண்டும்.

சர்வாதிகாரம் தொடர்ந்தால் அவரை மக்கள் சக்தியால் வீட்டுக்கு விரட்டும் வரை எமது போராட்டம் ஓயாது: ஒழியாது - என்றார் ரணில் விக்கிரம சிங்க. (க-4)

# எஸ்.பியின் விடுதலையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குத் தமது ஆதரவை வெளிப்படுத்தினர்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பல்வேறு சமூக அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் இப் பேரணியிலும் இறுதியாக நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் கலந்துகொண்டனர். பேரணியையொட்டி தலைநகரின் பல பாகங்களிலும், பிரதான பாதைகளிலும் பலத்த பொலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எந்தவிதமான அசம்பாவிதங்களும் ஏற்படவில்லை.

அரசுக்கு எதிராகவும், நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பப்பட்டபோதும் எந்த ஒரு தனி மனிதருக்கும் எதிராக வார்த்தைகள் பிரயோகிக்கப்படவில்லை.

எஸ்.பி.திஸநாயக்கவை விடுதலை செய்யக் கோரி அவரது பிறந்த ஊரான ஹங்குராங்கொத்தவில் இருந்து கொழும்பு நோக்கி மேற்கொள்ளப்பட்ட பாதயாத்திரை நேற்று நிறைவடைந்தது. நேற்று நண்பகல் களனிப் பிரதேசசபை முன்றிலில் இருந்து ஆரம்பமான பாதயாத்திரைக்கு கம்பஹா மாவட்ட எம்.பியும் ஐ.தே.கவின் பிரதித் தலைவருமான கரு.ஜயசூரிய தலைமை வகித்தார். ஐ.தே.கவின் எம்.பிக்களான ரவி கருணாநாயக்க, ஜயலத் ஜயவர்த்தன, ராஜித சேனாரத்ன, ஜோன் அமரதுங்க, திஸ்ஸ அத்தநாயக்க, ஜி.எல்.பீரிஸ், தயாஸ்ரீ விஜேசேகர ஆகியோர் பாதயாத்திரையில் பங்குபற்றினர். ஆயிரக் கணக்கானவர்கள் இந்தப் பாதயாத்திரையில் கலந்துகொண்டனர்.

களனியிலிருந்து புறப்பட்ட ஊர்வலத்தினர் பேலியகொடை விநாயகர் ஆலயத்தில் தேங்காய்களை உடைத்து வழிபாட்டில் ஈடுபட்டனர்.

முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்க தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. நேற்றுக் காலை மோதரை காளி கோயிலிலும் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

தாய்மாரைப் பிரதானமாகக் கொண்டு நடத்தப்பட்ட இந்தப் பாதயாத்திரையில் முன்னாள் அமைச்சர் ரேணுகா ஹேரத், மலேசியாவின் இலங்கைத் தூதுவராக முன்னர் கடமையாற்றிய ரோஸி சேனநாயக்க, ஓட்ட வீராங்கனை ஸ்ரீயானி குலவன்ஸ போன்றோர் கலந்துகொண்டனர்.

இந்தப் பாதயாத்திரைக்கு ஆதரவாகக் கொழும்பு நகரிலும் நான்கு பேரணிகள் நடத்தப்பட்டன. முன்னாள் அமைச்சர்கள் பந்துல குணவர்த்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, கொழும்பு மாநகர பிரதி மேயர் அஸாத் சாலி, காமினி லொக்குகே ஆகியோர் இவற்றுக்குத் தலைமை தாங்கினர். களனியில் இருந்து புறப்பட்ட பாதயாத்திரையில் வந்தோரைப் பேஸ்லைன் வீதி வழியாகக் ஹைட்பார்க் செல்வதற்குப் பொலீஸார் அனுமதி வழங்கவில்லை.

ஊறுகொடவத்தைச் சந்தியில் வைத்துப் பாதயாத்திரை ஸ்டேல் வீதி வழியாக ஹைட்பார்க் கோணர் மைதானத்துக்குத் திருப்பப்பட்டது. சுமார் மூன்று மணியளவில் ஹைட்பார்க் மைதானத்தை பாதயாத்திரிகள் சென்றடைந்தனர். நான்கு மணியளவில் ஏனைய பேரணிகளும் ஹைட்பார்க் மைதானத்தை வந்தடைந்தன.

சுமார் இருபதாயிரத்துக்கும் அதிகமான மக்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். பேரணியில் கலந்துகொண்டவர்கள் எஸ்.பிக்கு வழங்கப்பட்டது நாய்த்தீர்ப்பு (பளுதீந்துவ) எனக் கோஷமிட்டனர். நாய்த்தீர்ப்பு என சிங்களத்தில் எழுதப்பட்ட வாசகங்கள் அடங்கிய துணியைச் சுற்றியபடி இரு நாய்களும் அங்கு காணப்பட்டன.

எஸ்.பிக்கு வழங்கப்பட்ட தீர்ப்புப் பற்றி விமர்சிக்கும் பதாதைகளையும் பேரணியில் சென்றவர்கள் தாங்கியிருந்தனர். (எ-க-4-12)

## மரண அறிவித்தல்

### நல்லம்மா கிருஷ்ணபிள்ளை

அல்வாய் தெற்கு, துவாரகையைச் சேர்ந்த நல்லம்மா கிருஷ்ணபிள்ளை அவர்கள் 21.12.2004 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் கதிர்காமு கிருஷ்ணபிள்ளையின் (ட்றைவர்) அன்பு மனைவியும், மக்கள் வங்கி, பருத்தித்துறை கதிர்காமநாதன் அவர்களின் பாசமிகு தாயாரும், அமரர் சபாரத்தினம், நவரத்தினம் (சோதிடர்), சரஸ்வதி செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், உமா கதிர்காமநாதன் அவர்களின் அன்பு மாமியும், துவாரகா கிருஷானந், துஷாரகா ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று நண்பகல் 12.00 மணிக்கு அல்வாய் பங்குவேம்படி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தயவுசெய்து இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

துவாரகை,
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

தகவல்:
செ.அட்ஜெயலிங்கம்
(ஆசிரியர்-பெறாமகன்).

(சி-39971)(38-11-18)

D.C.A
மக்கள் வங்கி அருகில்
ஸ்ரான்லி றோட்,
யாழ்நகர்
பௌதிகவியல்
A/L 2006
எறியங்கள்
A/L 2005
மீட்டல்
By.K. கிரிதரன்
(39870)

அரிதான சந்தர்ப்பம் !
பக்கம் 04 பார்க்கவும்.

புத்தாண்டு வாழ்த்துக்கள்

ஈழ மண்ணில் வாழும் எம்மின மக்களுக்குப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை மன மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



தென்னிந்தியாவில் இருந்து
ஐந்தாவது முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ள பரம்பரை சோதிட கலையில் புகழ் பெற்ற சிவபால சோதிடர்

ராஜகுருசாமி அவர்கள்

புத்தாண்டை முன்னிட்டு புதுப்பலன்களை அறிவதற்கு மீண்டும் யாழ். மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி வருகைதந்துள்ளார்.

பார்க்கும் நேரம்: காலை 9.00 மணி - மாலை 6.00 மணி
கைரேகை மட்டும் காலை 9.00மணி முதல் 1.00 மணிவரை
★ ஜாதகம் ★ கைரேகை ★ எண் கணிதம் ★ பெயர் ராசி ★ திருமணப் பொருத்தம் இவற்றில் பல வருட அனுபவம்பெற்றவர்.

(சி-39896)(38-11-18) ராஜகுருசாமி
மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1 (112), TEMPLE ROAD (Near ICRC), JAFFNA.




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.